விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 133 வள்ளுவர் ஆண்டு 2056 சித்திரை 18 வியாழக்கிழமை (01.05.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



## 33 வேட்பாளர்கள் 349 ஆதரவாளர்கள் கைது

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாக மொத்தம் 33 வேட்பாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மார்ச் 3ஆம் திகதி முதல் நேற்றுக் காலை வரை சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக இது தொடர்பில் விடுத்த அறிக்கையில் பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதற்கிடையில் சம்பந்தப்பட்ட காலகட்டத்தில் 349 கட்சி ஆதரவாளர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

(ம-7,4)

## இந்தியா - பாகிஸ்தான் இடையே எந்நேரமும் யுத்தம் மூளலாம்

(கொழும்பு)

இந்தியா - பாகிஸ்தான் இடையே எந்நேரத்திலும் யுத்தம் மூளும் அபாயம் காணப்படுவதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அடுத்த 24 மணி முதல் 36 மணி நேரத்துக்குள் இந்தியா இராணுவத் தாக்குதலை நடத்தத் திட்டமிடுவதாக தங்கள் உளவுத்துறை எச்சரித்துள்ளதாக பாகிஸ்தானின் தகவல் தொடர்புத்துறை அமைச்சர் அத்தாவுல்லா தரார் தெரிவித்துள்ளார்.

ஏப்ரல் 22ஆம் திகதி பஹல்காமில் பயங்கரவாதி 15ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை மீள சீன அரசு உதவும்

### தூதுவர் கி ஷென் ஹொங்

(கொழும்பு)

இலங்கை இன்று கொந்தளிப்பான வர்த்தக உலகத்துக்குள் முழுமையாகச் சிக்கியுள்ளது. இலங்கையின் உரிமைகள் குறைமதிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இதிலிருந்து மீள்வதற்கு சீனா இலங்கைக்கு உதவும் 15ஆம் பக்கம் பார்க்க

## மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் சரியான முறையில் நிறைவேற்றப்படும்

### ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளிடம் ஜனாதிபதி உறுதி

(கொழும்பு)

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் சரியான முறையில் நிறைவேற்றப்படும் என ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளிடம் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க உறுதியளித்துள்ளார்.



(15ஆம் பக்கம் பார்க்க)

### தேர்தலை முன்னிட்டு

## பல்கலைக்கழக மாணவர்களுக்கு 3 நாட்கள் விடுமுறை

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முன்னிட்டு நாட்டிலுள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் கல்வி கற்கும் அனைத்து மாண 15ஆம் பக்கம் பார்க்க

## மதுபானக் கடைகள் இன்று பூட்டு

(கொழும்பு)

மே தினத்தை முன்னிட்டு நாட்டில் உள்ள மதுபான சாலைகள் மூடப்படும் என மதுவரித் திணைக்களம் நேற்று விசேட அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க

## பெற்றோல், மண்ணெண்ணெய், டீசல் விலைகள் குறைப்பு

(கொழும்பு)

பெற்றோல், மண்ணெண்ணெய், டீசல் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாகப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மாதாந்த எரிபொருள் விலை திருத்தத்தின்படி நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் எரிபொருளின் விலையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைய 299 ரூபாயாக இருந்த ஒக்டேன் 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 6 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 293 ரூபாயாகும்.

361 ரூபாயாக இருந்த ஒக்டேன் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 20 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளதுடன், 15ஆம் பக்கம் பார்க்க




அனைவருக்கும்
உழைப்பாளர் தின
நல்வாழ்த்துக்கள்

## ஜி.எஸ்.பி பிளஸ் மீளாய்வு சாதகமான முறையில் கருத்தில் கொள்ளப்படும்

### ஜனாதிபதியிடம் ஐரோப்பிய ஒன்றியம்

(கொழும்பு)

ஜி.எஸ்.பி பிளஸ் மீளாய்வு சாதகமான முறையில் கருத்தில் கொள்ளப்படும் என ஐரோப்பிய ஒன்றியத்தின் தெற்காசியப் பிரிவிற்கான தலைவர் சார்ல்ஸ் வைட்லி தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிற்கும் இடையில் நேற்றுப் புதன்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே சார்ல்ஸ் வைட்லி 15ஆம் பக்கம் பார்க்க

## வியாபார நிலையத்தில் வாக்காளர் அட்டைகள்

### வவுனியாவில் தபால் ஊழியர் உட்பட இருவர் கைது

(வவுனியா)

வவுனியா, பூந்தோட்டம் பகுதியில் போட்டியிடும் ஆளும் கட்சி வேட்பாளரின் சகோதரனின் வியாபார நிலையம் ஒன்றில் இருந்து ஒரு தொகை வாக்காளர் அட்டைகள் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் ஆளும் கட்சி வேட்பாளர் 15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் கதிரவேலு
## ஆனந்தசோதி

தோற்றம் 01.06.1962 — மறைவு 04.05.2022


மூன்றாண்டு சென்றதையா – உங்கள்
ஆனந்த முகங் கண்டு
கம்பீர சொல்கேட்டு உம்
பின் நின்ற எம்மை ஏமாற்றி மறைந்ததேனோ?
அனுதினமும் உங்கள் நினைவால்
நாம் அலைமோதி நிற்கின்றோம்
மறுபடியும் இம் மண்ணில் உங்களை
காணும் நாள் எந்நாள் அப்பா?
சிவனின் பாதங்களில் நீங்கள் நீண்டு உறங்க
பிரார்த்திக்கின்றோம் பிள்ளைகள் நாம்....

நீங்கா நினைவுகளுடன்
பிள்ளைகள்

விவேகானந்தா வீதி,
மஞ்சத்தடி தெற்கு,
இணுவில்.

(1080)

# மரண அறிவித்தல்



பிறப்பு 1939 - 05 - 10 — இறப்பு 2025 - 04 - 30

## வேலுப்பிள்ளை சின்னத்துரை

பலாலியைப் பிறப்பிடமாகவும் கோப்பாயை வசிப்பிட மாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சின்னத்துரை அவர்கள் நேற்று 30.04.2025 புதன்கிழமை அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற கந்தையா - பார்வதி தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பரமேஸ்வரி(றோசி) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ரவீந்திரகுமார் மற்றும் சுரேஸ்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் வதனா (லண்டன்), கமலாவதி(கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி - ஆசிரியர்) ஆகியோரின் மாமனாரும் பிரணாப், பிரசன்னா(லண்டன்) மற்றும் சுரேஷனா, சுஜந்தனா ஆகியோரின் அன்புப் பேரனும் தம்பிப்பிள்ளை, தம்பித்துரை(இத்தாலி), இரத்தினசிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 01.05.2025 வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*தகவல் :*
சுரேஸ்குமார்(மகன்)
077 255 5546

(4079)


# பொருளியற் கல்லூரி

நாவலர் வீதி, யாழ்ப்பாணம். | கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.

## BARATHY
பிரதான வீதி – சித்தன்கேணி

எமது மூன்று நிறுவனங்களிலும் A/L 2024 கலை, வர்த்தகப் பிரிவில் அதி உயர் பெறுபேறுகளைப் பெற்று உங்கள் பாடசாலைக்கும் எங்கள் நிறுவனத்திற்கும் பெருமை தேடித் தந்த அனைத்து மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம். இதேபோன்று நீங்களும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றிட ஆரம்பமாகின்றது.

## A/L DAY CLASS
கலை - வர்த்தகப் பிரிவு

ஆரம்பம் – யாழ் நகரிலும் சுன்னாகத்திலும்
02.05.2025 காலை 8.00 மணி
உங்கள் அனுமதிகளை பெற்றுக் கொள்ளவும்

யாழ் - 077 220 9651
சுன்னாகம் - 075 916 0417
சித்தன்கேணி - 077 169 2446

(C-2861)



வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127


# கண்ணீர் அஞ்சலி



பாடசாலை நண்பன் திரு.தெ.றதீஸ்வரன்
(உள்ளூராட்சி உதவிஆணையாளர் - வவுனியா)
அவர்களின் தாயார்

அமரர் தெய்வேந்திரம்
## கனகமணி

பிறப்பு 14.12.1943 — இறப்பு 28.04.2025

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை நண்பர்கள்
யா/புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்

(4076)

# 4ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 1948.03.08 — மறைவு 2021.05.01

## அமரர் செல்லப்பா அரிராஜசிங்கம்
(தெய்வத்தாய் களஞ்சிய உரிமையாளர், சமாதான நீதவான், முத்தையன்கட்டு இடதுகரை)

"நாள், வாரம், மாதம், வருடமென்று
நான்காண்டு ஆகியதே உமைப் பிரிந்து
நாளும் பொழுதும் தங்கள் நினைப்பெமக்கு
நானிலத்தில் வாழும்வரை நாம் மறவோம்"
மாமனாய், தந்தையாய், அண்ணனாய், தம்பியாய்
உற்ற தோழனாய் ஓர் ஆசானாய் விளங்கிய எம் தெய்வமே
எம்மை எல்லாம் மீளாத் துயரில் விட்டு எங்கு சென்றாய்
உன் பாசத்திற்காய் ஏங்கித் தவிக்கின்றோம்.

503, 7ம் யூனிற்,
இராமநாதபுரம்,
வட்டக்கச்சி

*நீங்கா நினைவுகளுடன்*
மருமக்கள்

(C-2859)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி மன்றங்களின் ஊழல் பட்டியல் விரைவில்!

## அநுர அரசின் அடுத்த அதிரடி

**(கொழும்பு)**

**முன்னைய அரசாங்கங்களின் காலத்தில் உள்ளூராட்சி மன்றங்களில் பிரதிநிதிகளாக இருந்தவர்களின் ஊழல் பட்டியலை வெளியிட அரசாங்கம் தீர்மானித்துள்ளது.**

முன்பு அதிகாரத்தில் இருந்த கட்சிகளின் சார்பில் உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகளாக இருந்தவர்கள், பல்வேறு ஊழல்களை மேற்கொண்டுள்ளனர்.

ஒருசிலர் கடந்த அரகலய காலத்தில் இடம்பெற்ற வன்செயல்கள் காரணமாக சேதமடைந்த வீடுகளுக்கு பெறுமதி கூடிய இழப்பீடுகளைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

அவ்வாறானவர்களின் பட்டியலை எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்னதாக வெளியிட அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதன் பிரகாரம் அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியாயாதிக்க சபைகளில் முன்னைய காலங்களில் நடைபெற்ற ஊழல் மற்றும் மோசடிகள் குறித்து தற்போது தனியான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறித்த சம்பவங்களுடன் தொடர்புடைய அதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. (நி-8)

# டெங்கு மற்றும் சிக்குன்குனியா பரவும் அபாயம் அதிகரிப்பு

## சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில் டெங்கு மற்றும் சிக்குன்குனியா பரவும் அபாயம் அதிகரித்து வருவதாக சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது நிலவும் மழையுடனான சீரற்ற காலநிலையினால், நாடு முழுவதும் நுளம்புப் பரவல் அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் விசேட வைத்தியர் பிரஷீலா சமரவீர தெரிவித்தார்.

இதற்கிடையில், ஐந்து மாவட்டங்கள் டெங்கு பரவக்கூடிய அதிக ஆபத்துள்ள பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

அதன்படி, கொழும்பு, இரத்தினபுரி, கம்பஹா, கண்டி மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களே அடையாளம் காணப்பட்டுள்ளன.

இதேவேளை, டெங்கு நுளம்பு பெருகும் இடங்களை உடனடியாக துப்புரவுப்படுத்துமாறு வைத்தியர் சமரவீர பொதுமக்களை வலியுறுத்தியுள்ளார். (நி-8)


# தேர்தலை முன்னிட்டு மூடப்படும் மோட்டார் போக்குவரத்து திணைக்களம்

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலை முன்னிட்டு இலங்கை மோட்டார் போக்குவரத்து திணைக்களம் மூடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, 2025 மே 5 மற்றும் 6 ஆகிய திகதிகளில் இரண்டு நாட்களுக்கு திணைக்களம் மூடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)


# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர். துரைச்சாமி சையோகநாதன்

(உரிமையாளர் - வில்வையடி ஸ்ரீ நாகபூசணி அம்பாள் கச்சான் பிஸ்கட் தயாரிப்பகம்)

மண்ணில் 01.08.1950

திதி வளர்பிறை சதுர்த்தி

விண்ணில் 26.04.2020

எண்ணமெங்கும் நிறைந்தீர்கள்
எமை ஏற்றமுற வைத்தீர்கள்
எங்கள் வாழ்வு மலந்திட
நீங்கள் வியர்வை சிந்தினீர்கள்
கண்ணை இமை காப்பது போல
எம்மை நிதம் காத்தீர்கள்
காலன் செய்த கொடும் செயலால்
விண்ணுலகம் சென்றீர்கள்
மண்ணுலகில் நாம்
எண்ணுகிறோம் நிதம் நிதம்
உங்கள் ஆத்ம ஈடேற்றத்துக்காய்...

(1078)

76/5 ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம். 077 3126 909

என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிளே ஓப் வாய்ப்பை இழந்தது சென்னை அணி



இந்தியன் பிரீமியர் லீக் போட்டியின் நேற்றைய ஆட்டத்தில் 4 விக்கெட் வித்தியாசத்தில் பஞ்சாப் அணி, சென்னை அணியை வீழத்தியது.

இதன் மூலம் முதல் அணியாக பிளே ஓப் வாய்ப்பை இழந்தது சென்னை அணி.

இந்தியன் பிரீமியர் லீக் டி20 தொடரின் 18-வது சீசன் மார்ச் 22 ஆம் தேதி முதல் பரபரப்பாக நடைபெற்று வருகிறது.

சென்னை சேப்பாக்கத்தில் உள்ள எம்.ஏ. சிதம்பரம் ஸ்டேடியத்தில் நடைபெறும் 49-வது லீக் போட்டியில் சென்னை மற்றும் பஞ்சாப் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற பஞ்சாப் அணி, களத்தடுப்பைத் தேர்வு செய்துள்ளது. இதன்படி முதலில் பேட்டிங் செய்த சென்னை அணியின் ஆரம்ப ஆட்டக்காரர்களாக ரஷீத் 11 ஓட்டங்களுடனும் ஆயுஷ் 7 ஓட்டங்களுடனும் அடுத்தடுத்து ஆட்டமிழந்து வெளியேறினர்.

அடுத்து வந்த ரவீந்திர ஜடேஜா 17 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். சிறுது நேரம் தாக்குபிடித்த டெவால்டு ப்ரேவிஸ் 32 ரன்களில் ஆட்டமிழந்தனர்.

அதிரடியாக ஆடிய சாம் கரன் 30 பந்துகளில் அரைசதம் கடந்தார். அவர் 4 சிக்ஸர், 9 பவுண்டரிகள் உட்பட 88 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

பஞ்சாப் அணியின் சஹால் 19வது ஓவரில், 4 விக்கெட் வீழ்த்தி அசத்தினார். கடைசி 3 பந்துகளில் 3 விக்கெட் வீழ்த்தி ஹாட்ரிக் எடுத்தார்.

இறுதியில் சென்னை அணி, 19.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 190 ஓட்டங்கள் எடுத்தது.

பஞ்சாப் அணியின் சஹால் 4 விக்கெட்டுகளும் ஜான்சன் மற்றும் அர்ஷ்தீப் சிங் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இதையடுத்து 191 ஓட்டங்கள் எனும் வெற்றி இலக்குடன் களம் இறங்கிய பஞ்சாப் அணியில் பிரியான்ஷி 23 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

அதிரடியாக ஆடி அரைசதம் அடித்த பிரப்சிம்ரன்சிங் 54 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த ஷஷாங்க் 23 ஓட்டங்களிலும், ஸ்ரேயாஸ் ஐய்யர் 72 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தனர்.

இறுதியில் பஞ்சாப் அணி 19.3 ஓவர்களில் 6 விக்கெட் இழப்பிற்கு 191 ரன்கள் எடுத்து, 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதன் மூலம் சென்னை அணி பிளே ஓப் வாய்ப்பை இழந்து ரசிகர்களை ஏமாற்றி உள்ளது.

(ம-4,7)



## ஐ.பி.எல் தொடரில் போட்டிகளை அதிகரிக்க பி.சி.சி.ஐ ஆலோசனை

ஐ.பி.எல் டி20 கிரிக்கெட் தொடரின் 2028 ஆம் ஆண்டு சீசனில் ஆட்டங்களின் எண்ணிக்கையை 74 இல் இருந்து 94 ஆக அதிகரிக்க பி.சி.சி.ஐ தீவிரமாக ஆலோசித்து வருவதாக ஐ.பி.எல் சேர்மன் அருண் துமால் தெரிவித்துள்ளார்.

அதேவேளையில் புதிய அணிகளைச் சேர்க்கும் திட்டம் எதுவும் இல்லை எனவும் தகவல்கள் வெளியாகி உள்ளன. 2022 ஆம் ஆண்டு சீசனில் புதிதாக குஜராத் டைட்டன்ஸ், லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் அணிகள் அறிமுகமாகின.

இதனால் ஐ.பி.எல் தொடர் 60 ஆட்டங்களில் இருந்து 74 ஆட்டங்களாக அதிகரித்தது. நடப்பு சீசனில் கூட போட்டிகளின் எண்ணிக்கையை 74 இல் இருந்து 84 ஆக அதிகரிக்கும் திட்டம் இருந்தது.

ஆனால் அட்டவணை திட்டமிடலில் ஏற்பட்ட தாமதம் மற்றும் ஒரே நாளில் 2 போட்டிகள் அதிகம் நடத்தப்படுவதை ஒளிபரப்பாளர்கள் விரும்பாததால் 84 போட்டிகளை நடத்தும் திட்டம் சாத்தியப்படவில்லை.

எனினும் எதிர்காலத்தில் ஆட்டங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதில் ஐ.பி.எல் நிர்வாகம் உறுதியாக உள்ளது. (6-8)

## ராஜஸ்தான் சேசிங்கில் சாதனை

ஐ.பி.எல் தொடரின்வரலாற்றில் 4 முறை 210+ ரன்களைச் சேசிங் செய்த முதல் அணி எனும் சாதனையை ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி படைத்துள்ளது.

குறித்த தொடரில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற போட்டியில் ராஜஸ்தான் ராயல்ஸ் - குஜராத் டைட்டன்ஸ் அணிகள் மோதின. இதில் முதலில் பட்டிங் செய்த குஜராத் அணி 20 ஓவரில் 209 ரன்கள் குவித்தது.

இதனையடுத்து களமிறங்கிய ராஜஸ்தான் அணி 15.5 ஓவரில் 212 ரன்கள் குவித்து 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம், ராஜஸ்தான் ராயல்ஸ் அணி உலக சாதனை படைத்துள்ளது. அதன்படி டி20 கிரிக்கெட் வரலாற்றில் 200 க்கும் மேற்பட்ட ஸ்கோரை வேகமாக துரத்திய அணியாக ராஜஸ்தான் சாதனை படைத்துள்ளது.

முன்னதாக 2018 ஆம் ஆண்டு, மிடில்செக்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் சர்ரே அணி 16 ஓவர்களில் 200 இற்கும் மேற்பட்ட ரன்களை துரத்தியதே சாதனையாக இருந்த நிலையில், ராயல்ஸ் அணி 15.5 ஓவர்களில் இலக்கை எட்டி புதிய சாதனையைப் படைத்துள்ளது.

இது தவிர, இந்த போட்டியில் ராஜஸ்தான் ராயல்ஸ் அணி 210 ரன்கள் என்ற இலக்கை எட்டியதன் மூலம், ஐ.பி.எல் தொடர் வரலாற்றில் 4 முறை 210+ ரன்களைச் சேசிங் செய்த முதல் அணி எனும் சாதனையையும் படைத்துள்ளது.

முன்னதாக மும்பை இந்தியன்ஸ், லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் மற்றும் சன்ரைசர்ஸ் ஐதராபாத் தலா மூன்று முறை இதனைச் செய்துள்ளது. அதே சமயம் உலகளவில் மிடில் செக்ஸ் அணி மட்டுமே 4 முறை இந்த மைல் கல்லை எட்டியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (6-8)

## பந்து வீச்சு ஆலோசகராக இங்கிலாந்து அணியில் டிம் சௌதி ?

இங்கிலாந்து அணியின் பந்து வீச்சு ஆலோசகராக நியூசிலாந்து வீரர் டிம் சௌதி நியமிக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

இங்கிலாந்தில் நடைபெறும் 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இந்திய அணி விளையாடவிருக்கிறது.

இந்தத் தொடரில் நியூசிலாந்தின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் டிம் சௌதியை இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சு ஆலோசகராக நியமிக்க அந்த அணி பரிசீலித்து வருவதாக தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

36 வயதான டிம் சௌதி கடந்த ஆண்டு டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றார். ஏற்கனவே, இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் ஆண்டர்சன் அவரது அணிக்கு ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ள நிலையில், டிம் சௌதியும் அவருடன் இணைந்து செயற்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (6-8)

## இன்றைய ஆட்டங்கள்




நேரம்: இரவு 7.30

ராஜஸ்தான் இடம்-ஜெய்ப்பூர் மைதானம் மும்பை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழல் நிறைந்த அரசியலால்

# அழிக்கப்பட்ட நாட்டை கட்டியெழுப்புவோம்

## மே தினச் செய்தியில் அழைப்பு விடுத்த ஜனாதிபதி

(கொழும்பு)

**உழைக்கும் மக்கள் உட்பட பொது மக்கள் இந்த முறை இந்நாட்டின் ஊழல் மிக்க, சிறப்புரிமை அரசியலை முடிவுக்குக் கொண்டு வந்து, மக்கள்நேய ஆட்சியின் கீழ், ஆழமான சாதகமான மாற்றத்துடன் சர்வதேச தொழிலாளர் தினம் இலங்கையில் கொண்டாடப்படுகிறது என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

தொழிலாளர் தின செய்தியில் அவர் மேலும் தெரிவித்ததாவது, ஒரு சில குடும்பங்கள் மற்றும் பரம்பரைகளால் 76 ஆண்டுகாலமாக மேற்கொள்ளப்பட்ட ஊழல் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவந்து, இந்நாட்டின் அரசியலில் குறிப்பிடத்தக்க திருப்புமுனையைக் குறிக்கும் வகையில், கடந்த ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களில் இன, மத வேறுபாடின்றி இந்நாட்டின் அனைத்து மக்களும் செயற்பட்டனர்.

அந்த மக்கள் ஆணையின் அபிலாஷைகளை உணர்ந்து, நாட்டில் பொருளாதார, சமூக, அரசியல் ரீதியான திருப்பத்தை ஏற்படுத்துவதற்காக தேசிய மக்கள் சக்தி செயலாற்றுகிறது.

ஊழல் நிறைந்த, சிறப்புரிமை அரசியல் முறைமையால் பாதாளத்திற்குள் தள்ளப்பட்ட இந்நாட்டின் பொருளாதாரத்தை, மீட்டெடுத்து நிலையான ஆரம்பத்தை ஏற்படுத்துவதில் தற்போது நாம் வெற்றி பெற்றுள்ளோம். இதன் தெளிவான அறிகுறிகள் இப்போது அனைவருக்கும் தெரிகின்றன.

அரசாங்கத்தின் முதல் வரவு செலவுத்திட்டத்திலேயே வரலாற்றில் இதுவரை இல்லாத அளவுக்கு அரச ஊழியர்களின் குறைந்தபட்ச சம்பளத்தை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்தமை உட்பட விவசாயிகள், மீனவர்கள், இளைஞர்கள், பெண்கள் மற்றும் மாணவர்கள் மாத்திரமன்றி, உற்பத்தியாளர்கள், சிறிய வர்த்தகர்கள் மற்றும் பல்வேறு தொழில்களில் ஈடுபடுபவர்கள் உட்பட சமூகத்தின் அனைத்து தரப்பினர்களுக்கும் நன்மைகளை வழங்க நாங்கள் நடவடிக்கை எடுத்துள்ளோம். அதேபோன்று, தோட்டத் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் அவர்களின் குடியுரிமை உரிமைகளை உறுதி செய்வதற்கும் நாம் நடவடிக்கை எடுத்துவருகின்றோம்.

சர்வதேச புவிசார் அரசியல் மாற்றங்கள் மற்றும் சவால்களை எதிர்கொள்ளும் வகையில் ஸ்திரமான பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முயற்சிக்கும் இந்த நாட்டின் உழைக்கும் மக்களின் உரிமைகளை உறுதி செய்து, ஊழல் நிறைந்த சிறப்புரிமை அரசியலால் அழிக்கப்பட்ட நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பி "வளமான நாடு மற்றும் அழகான வாழ்க்கை" உருவாக்க சகோதரத்துவத்துடன் ஒன்றிணைந்து போராட இந்நாட்டின் உழைக்கும் மக்களுக்கு அழைப்பு விடுப்பதுடன் உழைக்கும் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் அர்த்தமுள்ள சர்வதேச தொழிலாளர் தினத்திற்கு எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன் என அவர் தெரிவித்தார். (நி-8)

# அரசியல் அறிவை அதிகரிக்க பாடத்திட்டத்தில் மாற்றம்

## தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுமக்களிடையே அரசியல் கல்வியறிவை அதிகரிக்கும் முயற்சியில், பாடசாலை பாடத்திட்டத்தில் தேர்தல் பாடங்களை இணைப்பதற்கு தேசிய தேர்தல் ஆணையகம் கல்வி அமைச்சகத்துடன் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கியுள்ளது.

அதன்படி, தரம் 08 பாடத்திட்டத்தில் தேர்தல் கல்விகளை இணைக்க திட்டங்கள் நடைபெற்று வருவதாக தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

அரச கல்வி முறையில் சிவில் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் குறித்து போதுமான கவனம் செலுத்தப்படாததால், முறையான கல்வி மூலம் அரசியல் கல்வியறிவு வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர் சுட்டிக்காட்டினார்.

'இலங்கையில் அரசியல் எழுத்தறிவு மற்றும் உள்ளூராட்சித் தேர்தல்களில் அதன் தாக்கம்' என்ற தலைப்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற சிறப்பு கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார். (நி-8)

# இலங்கை நிர்வாகச்சேவை விசேட தரத்துக்கு 14 தமிழர்கள் பதவி உயர்வு

(கொழும்பு)

இலங்கை நிர்வாகசேவை தரம் 1ஐச் சேர்ந்த 23 அதிகாரிகள் பொதுச் சேவை ஆணைக்குழுவினால் நிர்வாக சேவை விசேட தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறு நிர்வாக சேவை விசேட தரத்திற்கு தேர்வான 23 அதிகாரிகளில் 14 பேர் தமிழர்கள் எனவும் ஒருவர் முஸ்லிம், 8 பேர் சிங்களவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2025.01.01 முதல் இந்த தர உயர்வு அமுலாகும் என கடந்த 25ஆம் திகதி ஆணைக்குழுவின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

பதவி உயர்வு பெறுவோர் பட்டியலில் எஸ்.சிவசிறி, எஸ்.முரளிதரன், எஸ். அச்சுதன், கே.சிறிமோகன், என். மணிவண்ணன், என்.சிவலிங்கம், ரி.திரேஸ்குமார், ஏ.சோதிநாதன், சுபாகினி மதியழகன், எஸ்.சத்தியசீலன், பி.தயானந்தன், வை.பரந்தாமன், எம். சிறிஸ்காந்தகுமார் மற்றும் வி.மதுமதி ஆகியோரின் பெயர்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# நிபந்தனைகளுடன் கூடிய வரிச்சலுகைகளை வழங்குங்கள்

## ஐரோப்பிய ஒன்றியத்திடம் மனோ கோரிக்கை



(கொழும்பு)

சர்வதேச சமூகத்தின் மீது நம்பிக்கை வைத்து தமிழ் மக்கள் சலிப்பு அடைந்து விட்டார்கள். இலங்கை தொடர்பில் ஜநாவில் பிரதான பங்களிப்பு செய்த அமெரிக்காவும் இன்று ஒதுங்கிவிட்டது. இந்நிலையில் எமது கடைசி சர்வதேச நம்பிக்கை ஐரோப்பிய ஒன்றியம் என்பதை புரிந்து கொண்டு நீங்கள் இலங்கை விவகாரத்தை அணுக வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இலங்கை வந்துள்ள ஐரோப்பிய ஒன்றிய ஜீஎஸ்பி ப்ளஸ் வரி சலுகை கண்காணிப்பு குழுவிற்கும், தமிழ் முற்போக்கு கூட்டணி குழுவிற்கும் இடையில் சந்திப்பு உரையாடல் கொழும்பில் உள்ள ஐரோப்பிய ஒன்றிய தூதரகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

பயங்கரவாத தடை சட்டத்தின் உடனடி இடை நிறுத்தம், புதிய அரசியலமைப்புக்கான கலந்துரையாடல் உடனடி ஆரம்பம், உண்மை ஆணைக்குழு மூலம் காணாமல் போனோர் மற்றும் பொறுப்பு கூறல் விவகாரங்களின் உடனடி அர்த்தபூர்வ நடவடிக்கை, நீண்டகால தமிழ் அரசியல் கைதிகளின் உடனடி விடுதலை, நவீன அடிமைத்துவம் அம்சங்களை கொண்ட மலையக தமிழர் சமூகத்துக்குள் வரும் பெருந்தோட்ட வாழ் மக்களை ஐரோப்பிய கண்காணிப்பு வலயத்துக்குள் கொண்டு வந்து அவர்களது காணி உரிமை உட்பட வாழ்வுரிமைகளை மேம்படுத்தல் ஆகியவை தொடர்பான முன்மொழிவுகளை நிறைவேற்றினால் மாத்திரமே இலங்கைக்கு ஜீஎஸ்பி ப்ளஸ் வரி சலுகை வழங்கப்பட வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார். (நி-8)

# வாகனங்களை ஒப்படைத்த முன்னாள் ஜனாதிபதிகள்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதிகள் தாங்கள் பயன்படுத்தியதில் மேலதிக வாகனங்களை ஜனாதிபதி செயலகத்திடம் ஒப்படைத்துள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.


முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவைத் தவிர, அனைத்து முன்னாள் ஜனாதிபதிகளும் தங்கள் மேலதிக வாகனங்களை ஜனாதிபதி செயலகத்திடம் ஒப்படைத்துள்ளதாக ஜனாதிபதி செயலகத்தின் சிரேஷ்ட ஊடகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தால் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்ட மூன்று வாகனங்களில் ஒன்றைத் திருப்பித் தருமாறு ஜனாதிபதியின் செயலாளர் சனத் நந்திக குமநாயக்க, முன்னாள் ஜனாதிபதிகளுக்கு அனுப்பிய எழுத்துப்பூர்வ அறிவிப்பிற்கமைய, இந்த வாகனங்கள் மீள ஒப்படைக்கப்பட்டுள்ளன. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர்களின் அத்து மீறல்கள் தடுக்கப்படும்

## அமைச்சர் சந்திரசேகர்



(யாழ்ப்பாணம்)

"இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்புக்குள் அத்து மீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதைத் தடுப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும். இது தொடர்பில் இலங்கை கடற்படையினருக்கும் உரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன." என கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இ.சந்திரசேகர் தெரிவித்தார்.

யாழ்.நெடுந்தீவு பகுதிக்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்டிருந்த அமைச்சர், மீனவ சங்கங்களின் பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடினார். இதன்போதே இவ்வாறு தெரிவித்தார்.

இந்திய மீனவர்களின் அத்துமீறல் மற்றும் சட்ட விரோத மீன்பிடி நடவடிக்கையால் தமது வாழ்வாதாரத்துக்கு ஏற்படும் பாதிப்புகள் தொடர்பில் மீனவர்கள், அமைச்சரிடம் எடுத்துரைத்தனர் மேலும் இந்திய மீனவர்களின் அத்துமீறலை தடுப்பதற்கு நிரந்தர பாதுகாப்பு பொறிமுறையொன்று அவசியம் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

இதற்கு பதிலளித்த அமைச்சர், இந்திய மீனவர்களின் அத்துமீறலை தடுப்பதற்குரிய இராஜதந்திர நடவடிக்கை உட்பட அனைத்து விதமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும் எனவும், இது தொடர்பில் கடற்படையினருக்கும் உரிய ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது எனவும் குறிப்பிட்டார்.

இதன்போது நெடுந்தீவு அபிவிருத்தி மற்றும் சுற்றுலாத்துறை மேம்பாடு தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டது. (6-8)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

மூளாய் வதிரன்புலோ ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய மஹோற்சவம் இன்று வியாழக் கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பன்னிரண்டு நாட்கள் உற்சவங்கள் இடம் பெறவுள்ளன.

இவ் மஹோற்சவ தினங்களில் எதிர்வரும் 5 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு 8 மணிக்கு சப்பறத் திருவிழாவும், 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5 மணிக்கு வசந்த மண்டப பூஜையைத் தொடர்ந்து தேர்த்திருவிழாவும், 12 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தோற்சவமும் அன்று மாலை 6.30 மணிக்கு திருவூஞ்சல் மற்றும் கொடியிறக்கம் என்பன இடம் பெற்று 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு பூங்காவன உற்சவமும் இடம்பெறவுள்ளது என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (3-8)

## இந்திய அரசின் ஆயுஸ் புலமைப்பரிசில் விண்ணப்பங்கோரல்

(யாழ்ப்பாணம்)

இந்திய அரசாங்கத்தினால் வருடாந்தம் வழங்கப்படும் ஆயுஸ் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் இந்தியப் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்பதற்காக இலங்கையர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆயுஸ் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் சித்த, ஆயுர்வேத, யுனானி மற்றும் ஹோமியோபதி ஆகிய துறைகளில் இளமாணி, முதுமாணி மற்றும் கலாநிதி கற்கை நெறிகளைத் தொடர முடியும்.

ஒவ்வொரு கற்கை நெறிகளுக்குமான தகைமைகள் மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பான விபரங்கள் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

ஆர்வமுடையவர்கள் www.a2ascholarships.iccr.gov.in என்ற இணையத் தளத்தின் ஊடாக எதிர்வரும் ஜூன் மாதம் 8 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கலாம் என்றும் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தின் முதல் செயலாளர் சந்திப் சௌதாரி அறிவித்துள்ளார்.

மேலதிக தகவல்களுக்கு 011-242 1605 என்ற தொலைபேசி இலக்கத்துடன் அல்லது eduwing.colombo@mea.gov.in என்ற மின்னஞ்சல் முகவரி ஊடாக இந்தியத் தூதரகத்தின் கல்விப் பிரிவுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும்.

தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு அவர்களின் கற்றல் காலம் முழுவதற்குமான கற்கைநெறிக் கட்டணம் மற்றும் மாதாந்த மாணவர் உதவித் தொகை, தங்குமிடத்துக்கான உதவுதொகை மற்றும் வருடாந்த மானியம் என்பன வழங்கப்படும். (6-8)

## அங்காடி உரிமையாளருக்கு ரூ.40 ஆயிரம் தண்டம் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழில் வண்டு மொய்த்த பொருட்கள் மற்றும் காலாவதியான பொருட்கள் என்பவற்றை விற்பனைக்காக வைத்திருந்த பல்பொருள் அங்காடியின் உரிமையாளருக்கு 40ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு பொது சுகாதார பரிசோதகர் குழுவினரால், உணவு கையாளும் நிலையங்கள், பூட்பற்றிகள், பல சரக்கு வியாபார நிலையங்கள் என்பன பரிசோதனைக்கு உட்படுத் [illegible]

அதன் போது, கோண்டாவில் பகுதியில் உள்ள பல்பொருள் அங்காடி ஒன்றில் வண்டுமொய்த்த பொருட்கள் மற்றும் காலாவதியான பொருட்கள் என்பன மீட்கப்பட்டன.

அது தொடர்பில் நேற்று முன்தினம் யாழ்.மேலதிக நீதவான் நீதிமன்றில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, உரிமையாளர் தன் மீதான குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டதை அடுத்து, உரிமையாளரை கடுமையாக எச்சரித்த மன்று , 40 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்தது.(6-8-33)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(சாவகச்சேரி)

யா/இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலய பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டமும்-புதிய நிர்வாகத் தெரிவும் அண்மையில் பாடசாலை வளாகத்தில் பாடசாலை அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் இடம்பெற்றிருந்தது.பழைய மாணவர் சங்க புதிய நிர்வாகத்தில் தலைவராக பாடசாலை அதிபர் தி.அபராஜிதனும்,உப தலைவராக பாடசாலையின் உப அதிபர் சி. ஸ்ரீ பாலகிருஷ்ணபிள்ளை, செயலாளராக சி.நிமலன், உபசெயலாளராக திருமதி இராஜ்குமார், பொருளாளராக திருமதி சுமதி நவரட்ணம், உப பொருளாளராக சி.சுஜீபன் ஆகியோருடன் நிர்வாகசபை உறுப்பினர்களாக ஆறு பேர் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

அத்துடன் கணக்காய்வாளராக ந.ஸ்ரீரங்கநாதன் மற்றும் காப்பாளராக ந.திருவாசகன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். (3-8-30)

## க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள்-2024

### சுழிபுரம் /விக்ரோறியா கல்லூரி

**உயிரியல் பிரிவு**

ரி.லேகா-3ஏ , எஸ்.சாரங்கன் -3ஏ , ரி.பிரணவன்-2ஏபி

**வணிகப்பிரிவு**

ஆர். சிந்துஜன்-3ஏ, வி. டுபிஷா-3ஏ, ஆர். கஜானி-2ஏபி, கே.கஜகாயினி- 2ஏபி .

### யா/ அருணோதயக் கல்லூரி

**உயிரியல் பிரிவு**

இ. தக்சன்-3ஏ

**பௌதிக விஞ்ஞானப்பிரிவு**

க.சியானிசன் -3ஏ, உ_சோபிதரன் -3ஏ

**வர்த்தகப்பிரிவு**

அ.அனித்தா -2ஏபி

### யா/ ஹாட்லிக் கல்லூரி

**கணிதப் பிரிவு**

கே. தசரத் -3ஏ, வை. அபிகன் -3ஏ, ஜெ. நிவேதன்- 3ஏ, ஜெ. நிவேதிகன் -3ஏ , என் -ஷலின்-3 ஏ , எ.யூட் பிரியதர்சன் -3ஏ , எஸ் .அபிஹறன் -3ஏ, ஆர் .சதுர்சன் -3ஏ, எஸ்.தனோஜ் -3ஏ, எ.ஷாகின்ஜை-3ஏ, எம். சாருஜன்-3ஏ,ஆர்.ஷரவணன்-3ஏ, என்.கிஸ்ணமேனன் -3ஏ, ஜெ.விஸ்ணுராஜ்-3ஏ,எஸ். அட்சஜன்-3ஏ, எம்.அர்ஜுன்-3ஏ ,எஸ். அனோஜன்-3ஏ, கே.வைகுன்தன்-3ஏ ,எஸ்.அன்சனன்-3ஏ ,எம். பிரவீன்-3ஏ ,கே.சினேகன்-3ஏ .

**உயிரியல் பிரிவு**

கே.கஜீவன்-3ஏ ,சீ. மதுஷன்-3ஏ , யு.மதுமிதன்-3ஏ , வி.ஹர்சன்-3ஏ, எஸ்.தினேஷ்-3ஏ ,ரி.தேவானந்தா-2ஏபி , ரி.கௌதம் -2ஏபி

**வணிகப்பிரிவு**

ரி .அனுசன் -3ஏ

**கலைப்பிரிவு**

எஸ் .மதுசன்-3ஏ , எஸ்.நிதர்சன் -2ஏபி

### சென் .பற்றிக்ஸ் கல்லூரி

**உயிரியல் பிரிவு**

என் .மதுஷன் -3ஏ ,எ.ஜோன்சன் -2ஏபி .

**வணிகப்பிரிவு**

எஸ்.ஷியான் -3ஏ , டி.தமிழ்பிரியன் -3ஏ ,எஸ்.மரியவின்சன் -2ஏபி , எச் .ஜெருஷன் -2ஏபி .

**கலைப்பிரிவு**

எ . அபிஷாந் -3ஏ , பி.மதுஷன் -3ஏ , வி.மேஷக் -3ஏ , எ .ஷாரோன் -2ஏபி , ஐ.அருள்ராஜ் - 2ஏபி.

### யா/ மகாஜனக் கல்லூரி

**கணிதப்பிரிவு( ஆங்கில மொழி மூலம்)**

எல்.சர்கேசன் -2ஏபி

**கணிதப்பிரிவு**

எஸ்.தமிழவன் - 3ஏ

**கலைப்பிரிவு**

யு .கிலானிகா -3ஏ , எஸ் .கிருபாலினி -3ஏ , கே.ஜனுசியா-3ஏ ,எஸ் , அனித் -2ஏபி , எஸ்.சௌமியா -2ஏபி , கே .சானுஜா -2ஏபி .

**வணிகப்பிரிவு**

கே.சுப்ரஜா-3ஏ, கே.பிரிதிக்ஷா -3ஏ ,எஸ் .விஷ்ணுகா -3ஏ, எஸ்.மதுமிதா -3ஏ .

### யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி

**உயிரியல் பிரிவு**

ரி.டிலக்ஷன் - 3ஏ, என்.அரதி- 3ஏ, கே.கிருசிகா- 3ஏ , கே.வர்ஜிதா-2ஏபி, எஸ்.சாருகா-2ஏபி

**பௌதீகவியல் பிரிவு**

ஜெ. சஹித்தியன்- 3ஏ, எஸ்.நிலக்சன்-3ஏ, ரி.டர்சிகன்-2ஏபி, எம்.ஆகேஷ்-2ஏபி, ஜெ.ஷாருமதி-2ஏபி.

**வணிகப்பிரிவு**

ரி.முகின்தன்-2ஏபி, ரி.கர்சனா-2ஏபி, ரி.கஜானி-2ஏபி

**தொழில்நுட்ப பிரிவு**

எஸ்.பிரணவன்-2ஏபி


**கலைப்பிரிவு**

ஜெ.டெஷிக்கா- 3ஏ, என்.அபிசனா- 3ஏ, எ.சாம்பவி- 3ஏ, கே.லக்ஷிகன்-3ஏ,கே.அபிஷாகினி- 3ஏ, பி.கிருபாலினி- 3ஏ, பி.கஜானா- 3ஏ, எஸ்.வினித்- 3ஏ, என்.மெல்கியா- 3ஏ, எம்.கணேஷா- 3ஏ, ரி.திவ்யா-3ஏ, கே.சுவேதன்- 3ஏ, எம்.ஆரணிகா- 3ஏ, என்.சண்முகி-3ஏ, எ.லக்ஷனா- 3ஏ, யு.நர்த்தஹி- 2ஏபி, எஸ்.கஜானா-2ஏபி, ரி.ருஷானா-2ஏபி, கே.சாமினி-2ஏபி, எஸ்.கஜேந்திரா-2ஏபி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழைக்கும் கைகளே! உருவாக்கும் கைகளே!

மே மாதம் பிறந்ததும் அனைவரும் விழித்துக் கொண்டு உழைப்பின் மேன்மையை பற்றி பேசுவோம்... பேசுவோம்... அன்று முழுவதும் பேசுவோம். மறு நாள் அவரவர்கள் தாங்கள் வழக்கமாக பார்க்கும் வேலைகளுக்கு திரும்பி விடுவார்கள். தீபாவளி, பொங்கல் மாதிரி ஒரு நாள் மட்டும் சிறப்பாக கொண்டாடி முடித்துவிடுகிறார்கள் அரசியல்வாதிகள்.



"ஆண்டவன் உலகத்தின் முதலாளி அவனுக்கு நான் ஒரு தொழிலாளி.." "கடவுள் என்னும் முதலாளி கண்டெடுத்த தொழிலாளி" "விவசாயி... விவசாயி..." "ஒருவன் முதலாளி உலகில் மற்றவன் தொழிலாளி.." புகழ் பெற்ற இந்த பாடல்கள் உலகம் முழுவதற்கும் இறைவன் ஒருவனே முதலாளி என்ற ஒன்றையே பிரதானமாக சுட்டிக்காட்டுகின்றன.

முதலாளி என்பவன் மற்றவர்களுக்கு வேலைகளை வழங்குபவன். அவர்கள் பார்க்கும் வேலைகளை சரி பார்க்கும் வேலையை பார்க்கும் அவனும் ஒரு தொழிலாளியே. ஒரு தொழிற்சாலை, ஒரு நிறுவனம் என்று சொல்லிக் கொண்டே போகலாம். இந்த இடங்களிலெல்லாம் ஒரு கூட்டு உழைப்பு, கூட்டு முயற்சி இருந்து கொண்டே இருக்கிறது. அவரவருக்கு கொடுக்கப்பட்டுள்ள வேலைகளை அவரவர்கள் செய்கிறார்கள்.

நான் என்னும் ஆணவம் அங்கே புகுந்தால் எல்லாமே சிதைந்து போகும். 16 பெட்டிகள், 2 டிரைவர்கள் வழி நடத்தும் கார்ட், பாதுகாப்பான தண்டவாளங்கள், வழியெங்கும் சரியான சிக்னல் கொடுப்பவர்கள்... இவர்கள் உழைப்பால் ஒரு அதிவேக ரயில் தனது பணியை சிறப்பாக செய்கிறது. ஏற்றத்தாழ்வு ஏற்பட்டால் ரயில் எப்படி இயங்க முடியும்.

வேலை பார்க்கும் இடமும் ஒரு கூட்டுக் குடும்பம் தான். முடிவு எடுப்பவர் குடும்பத் தலைவன். தான் எடுக்கும் முடிவுகள் தனது குடும்பத்தின் நன்மைக்கே என்று நினைத்து செயற்படுபவரே சிறந்த தலைவர்.

நாம் உழைத்துக் கொண்டு இருக்கும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நொடியும் நமக்கு "மே" தினம் தான். தினம் தினம் மே தினம் தான். மேகம் கூட்டமாக வந்தால் அடை மழை பெய்து நாடு செழிக்கும். மேகத் தொழிலாளிகள் இணைந்து உருவாக்கும் "மழை" அனைத்து உயிர்களுக்கும் நன்மையைத் தரும்.

பார்க்கும் மரங்கள், காட்சிகள், பொருட்கள் எல்லாவற்றிலுமே பல தொழிலாளிகளின் முகங்கள் மறைந்து இருக்கும். மறை பொருளாக இருந்து எங்கும் நீக்கமற நிறைந்திருப்பவன் தொழிலாளி தான். பெருமையோடு சொல்வோம் நாம் அனைவரும் "தொழிலாளி" என்று. "உழைக்கும் கைகளே உருவாக்கும் கைகளே... உலகை புது முறையில் உண்டாக்கும் கைகளே" என்று போற்றிப் பாடுவோம். மேலும் மேலும் மேகமாக திரண்டு வந்து தாகம் தீர்த்து பார்க்குமிடமெல்லாம் பசுமையாக்குவோம்

---

# வாக்காளர் அட்டைகள் கிடைக்கப்பெறாதவர்கள்

## தபாலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

## தபால் திணைக்களம் அறிவுறுத்து

**(கொழும்பு)**

**எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலுக்கான உத்தியோகப்பூர்வ வாக்காளர் அட்டைகளைப் பெறாதவர்கள், பணி நேரங்களில் தங்கள் உள்ளூர் தபால் நிலையத்திற்குச் சென்று தங்கள் அடையாளத்தை நிரூபித்து அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் என்று தபால் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.**

மேலும், தேர்தல் நடைபெறும் நாளன்று மாலை 4.00 மணி வரை இது அமுலில் இருக்கும்.

உள்ளூராட்சித் தேர்தலுக்கான உத்தியோகப்பூர்வ வாக்காளர் அட்டை விநியோகம் ஏப்ரல் 16 அன்று தொடங்கி நேற்று முன்தினத்துடன் நிறைவுக்கு வந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி-8)

---

28.04.2025 இல் வேலணை பிரதேச சபையினால் வலம்புரியில் பிரசுரிக்கப்பட்ட IFB இல் கீழ்குறிப்பிடப்படும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

INVITATION FOR BIDS (IFB)
IFB No : 2025/01
VELANAI PRADESHIYA SABHA,
VANGALAVADY JUNCTION, VELANAI.

| | |
|---|---|
| Document Issuing/Purchasing Period | From 2025-04.28 To 2025-05-14 |
| Closing and Opening of Bids | At 10.30 A.M on 2025-05-15 |

**Chairman,**
**Divisional Procurement Committee(DPC)**
**Velanai Pradeshiya Sabha,**
**Vangalavady junction, Velanai .**

---

# உழைப்பவரை வாழ்த்திடுவோம்!



**உலகம் உயர்ந்திட உழைத்திடும் உத்தமர்**
**பலமது கொண்டு பணிபல செய்பவர்**
**நலமிகு வாழ்வை நிறைவாய்ப் பெற்றிட**
**புலர்க பொழுதென வாழ்த்திடு வோமே!**

**ப.மகேந்திரதாசன்,**
**நாயன்மார்கட்டு.**

---

## வலிகாமம் வடக்கு பிரதேசசபை மயிலிட்டி உப அலுவலகம் ஆதனப்பெயர் மாற்ற அறிவித்தல்

விண்ணப்பதார் சுகுமார் லோமினன் பெண் டோமினிக்கா

வலிகாமம் வடக்கு பிரதேசசபை மயிலிட்டி உப அலுவலகத்திற்கு உட்பட்ட கட்டுவன் வீதி மயிலிட்டி என்னும் முகவரியில் அமைந்துள்ள இவ் ஆதனம் ஆதனப்பதிவேட்டில் வட்டாரம் 14 மயிலிட்டி கட்டுவன் வீதியில் அமைந்துள்ளது.

குறித்தஆதனம் பிரசித்தநொத்தாரிஸ் திருமதி க.கீர்த்தனா முகதாவில் உறுதி இலக்கம் 1027 இலக்கத்தில் 2019.10.01 அன்று நிறைவேறிய நன்கொடை உறுதியின் பிரகாரம் குறித்த சுகுமார் லோமினன் பெண் டோமினிக்காவிற்கு அறுதி உறுதி மூலம் வந்தடைந்தது.

**ஆதனவிபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்கு பகுதி மயிலிட்டி கோவிற்பற்றும் வறுத்தலை விளான் இறை இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் K.பகீரதன் அவர்களின் 2025.02.26 ஆம் திகதிய 176ஆம் இலக்க வரைபடத்தின்படி இலக்கம் 176 ஆம் துண்டு 1 ஆகும்.

**இதற்கு எல்லைகள்**

கிழக்கு அன்னபூரணம் பெண் மயில்வாகனத்தின் ஆதனம்
வடக்கு 4400ஆம் இலக்க துண்டு 05 எனச் சுட்டிய ஆதனம்
மேற்கு மிகுதி ஆதனம்
தெற்கு றோட்டு

மேற்குறித்த ஆதனத்தை சுகுமார் லோமினன் பெண் டோமினிக்கா என்னும் பெயரில் பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ளஉறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறு யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு பெயர் மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்தஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**செயலாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை**
**காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)**

(4071)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

# சீன உணவகத்தில் திடீர் தீப்பரவல்!




(பீஜிங்)

சீனாவின் வடக்கு நகரமான லியோனிங்கில் உள்ள உணவகம் ஒன்றில் திடீரென ஏற்பட்ட தீ விபத்தில் 22 பேர் உயிரிழந்த நிலையில் மேலும் 3 பேர் படுகாயமடைந்துள்ளதாக சீன ஊடங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறித்த தீ விபத்து நேற்று முன்தினம் பிற்பகல் ஏற்பட்டுள்ளது.

காயமடைந்தவர்களுக்கு முழுமையான சிகிச்சை அளிக்குமாறு சீன ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

தீவிபத்துக்கான காரணம் தொடர்பில் இதுவரை எந்தவொரு தகவலும் வெளியாகவில்லையென சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

சீனாவில், ஊழியர்கள் பாதுகாப்பு அம்சங்களை புறக்கணிப்பதால், தொழிற்துறை விபத்துகள் அடிக்கடி நிகழ்கின்றன எனவும் உரிய முறையில் பராமரிக்கப்படாத உட்கட்டமைப்பு, சட்டவிரோதமாக சேமிக்கப்படும் இரசாயனங்கள் மற்றும் தீ வெளியேறும் வழிகள் மற்றும் தீத்தடுப்பு இன்மை போன்ற காரணங்களே இவ்வாறான தீ விபத்துக்குக் காரணம் எனவும் கூறப்படுகின்றது. (நி-8)

# கனேடிய பிரதமர் கார்னிக்கு அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் வாழ்த்து

(வோஷிங்டன்)

கனடாவில் நேற்று முன்தினம் செவ்வாயன்று நடந்த பொதுத் தேர்தலில் லிபரல் கட்சி வெற்றி பெற்றதை அடுத்து, கனடா பிரதமர் மார்க் கார்னிக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வாழ்த்துத் தெரிவித்தார்.

கனேடிய பொருளாதாரத்தைப் பாதிக்கும் அமெரிக்க வரிகள் உட்பட வர்த்தக பதட்டங்களுக்கு மத்தியில் இரு தலைவர்களும் தங்கள் நாடுகளின் உறவுகளைப் பற்றி விவாதித்தனர்.

இரு தலைவர்களும் வெகுவிரைவில் நேரில் சந்திக்கவும் ஒப்புக்கொண்டனர்.

மேலும் கனடாவை "அமெரிக்காவின் 51ஆவது மாநிலம்" என்று குறிப்பிட்ட ட்ரம்பின் வரி அச்சுறுத்தல்கள் மற்றும் தொடர்ச்சியான தாக்குதல்களின் பின்னணியில் இந்தத் தேர்தல் நடந்தது.

அமெரிக்க தலைமைத்துவத்தில் ஏற்பட்ட மாற்றம் கனடாவில் வியத்தகு தாக்கத்தை ஏற்படுத்தி யுள்ளது.



ட்ரம்பின் திடீர் வரிகள் கனடாவின் பொருளாதாரத்தை நிச்சயமற்ற தன்மையில் ஆழ்த்தியுள்ளன.

நாட்டின் ஏற்றுமதியில் 70 சதவீதத்திற்கும் அதிகமானவை அமெரிக்காவிற்கு செல்கின்றன, இதில் வாகன பாகங்கள், மரம், விவசாய பொருட்கள் மற்றும் எஃகு ஆகியவை அடங்கும். மார்ச் மாதத் தொடக்கத்தில், புதிய வாகன வரிகளை ட்ரம்ப் அறிவித்ததைத் தொடர்ந்து, கனடாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான நீண்டகால பொருளாதார மற்றும் பாதுகாப்பு உறவு முடிவுக்கு வந்துவிட்டதாக மார்க் கார்னி அண்மையில் அறிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி-8)

# இந்திய இ
# விரைவில் ஊ

## தேவைப்பட்டால் அணு ஆயு
## பயன்படுத்தத் தயங்க மா

## பாகிஸ்தான் பாதுகாப்பு அ

**(இஸ்லாமாபாத்)**

**இந்திய இராணுவம் விரைவில் பாகிஸ்தானுக்குள் ஊடுருவும் என்றும் அதனைத் தவிர்க்க முடியாது என்றும் அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் கவாஜா முகமது ஆசிப் தெரிவித்துள்ளார்.**

இஸ்லாமாபாத்தில் ராய்ட்டரஸ் செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் "இராணுவ ஊடுருவல் நிகழும். தற்போது அது தவிர்க்க முடியாத ஒன்று என்பதால் நாங்கள் எங்கள் படைகளை பலப்படுத்தியுள்ளோம். தற்போதைய சூழலில் எத்தகைய யுக்திகள் மேற்கொள்ளப்பட வேண்டுமோ அதற்கான முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன." என்று பாதுகாப்பு அமைச்சர் கவாஜா முகமது ஆசிப் தெரிவித்துள்ளார்.

இந்தியா தாக்குதல் நடத்த உள்ளதற்கான சாத்தியம் குறித்து பாகிஸ்தான் இராணுவம் அரசுக்குத் தகவல் தெரிவித்துள்ளதாகவும் கவாஜா முகமது ஆசிப் கூறியுள்ளார். அதேநேரத்தில் விரைவில் ஊடுருவல் நிகழும் என்று அவர் நினை
பதற்கான காரணங்கள் குறித்து அவ
எதுவும் தெரிவிக்கவில்லை.

பாகிஸ்தானின் அணு ஆயு
பிரயோகம் குறித்த கேள்விக்கு பதி
அளித்த கவாஜா முகமது ஆசி
"இவ்விடயத்தில் பாகிஸ்தான் மிகுந்
எச்சரிக்கையுடன் இருக்கும்.

அதே நேரத்தில் எங்கள
இருப்புக்கு நேரடி அச்சுறுத்தல
வந்தால் மட்டுமே அணு ஆயுதங்க
ளைப் பயன்படுத்துவோம்." என்று

# சக்திமிகு ரேடார் சிஸ்டங்களை எல்லைக்கு நகர்த்தும் பாகிஸ்தான்!

(இஸ்லாமாபாத்)

இந்தியாவுக்கு எதிராக உலகில் சக்தி வாய்ந்த ரேடாரை காஷ்மீர் எல்லைக்கு பாகிஸ்தான் கொண்டு வந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

காஷ்மீர் தாக்குதல் காரணமாக இந்தியாவிற்கும், பாகிஸ்தானுக்கும் இடையே மோதல் என்பது அதிகரித்துள்ளது.

இதனால் இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையே போர் மூளும் அபாயம் அதிகமாகக் காணப்படுகிறது.

காஷ்மீரின் பஹல் காமில் உள்ள சுற்றுலாத் தளத்தில் பாகிஸ்தான் பயங்கரவாதிகள் கடந்த 22ஆம் திகதி துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ராணுவம் ஊடுருவும்!

## தங்களைப் ட்டோம்


## அமைச்சர்

தெரிவித்துள்ளார்.

போரை தவிர்க்க பாகிஸ்தான் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து விளக்கிய கவாஜா முகமது ஆசிப் "வளைகுடா நாடுகள் மற்றும் சீனா உள்ளிட்ட நட்பு நாடுகளை அணுகினோம்.

பிரிட்டன் அமெரிக்கா மற்றும் பிறநாடுகளுக்கும் நிலைமை குறித்து விளக்கமளித்துள்ளோம். அரேபிய வளைகுடாவில் உள்ள எங்கள் நண்பர்கள் சிலர் இரு தரப்பினருடனும் பேசியுள்ளனர்." என்று தெரிவித்துள்ளார். இந்தியாவும் பாகிஸ்தானும் நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று கடந்த திங்கட்கிழமை சீனா வேண்டுகோள் விடுத்தது.

மேலும் நிலைமையை தணிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் வரவேற்பதாகவும் தெரிவித்தது.



இந்த விவகாரத்தில் தலையிடுவதில் இருந்து அமெரிக்கா "விலகி" இருப்பதாக கவாஜா முகமது ஆசிப் தெரிவித்தார். ஆனால் இந்தியாவும் பாகிஸ்தானும் தங்களுக்கு இடையேயான உறவுகளை முடிவு செய்யும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கடந்த வாரம் தெரிவித்தார். எனினும் இரு தரப்பினருடனும் தொடர்பில் இருப்பதாகவும் "பொறுப்பான தீர்வை" நோக்கிச் செயற்படுமாறு வலியுறுத்துவதாகவும் அமெரிக்க வெளியுறவுத்துறை அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

---

### இந்தியா, பாகிஸ்தான் அமைச்சர்களுடன்

# அமெரிக்கா பேச்சுவார்த்தை



இந்தியா, பாகிஸ்தான் விவகாரம் குறித்து இரு நாட்டு வெளியுறவு அமைச்சர்களுடன் அமெரிக்க பாதுகாப்புத்துறை செயலாளர் மார்க்கோ ரூபியோ பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளதாக அமெரிக்க ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

காஷ்மீரின் பஹல்காம் சுற்றுலா தளத்தில் கடந்த 22ஆம் திகதி தீவிரவாதிகளால் நடத்தப்பட்ட தாக்குதலில் 26 சுற்றுலாப் பயணிகள் கொல்லப்பட்ட சம்பவம், சர்வதேச அளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இந்த தீவிரவாத தாக்குதலால் இந்தியா - பாகிஸ்தான் இடையிலான உறவில் பதற்றம் அதிகரித்துள்ளது.

இதன் எதிரொலியாக சிந்து நதிநீர் ஒப்பந்தத்தை நிறுத்தி வைப்பதாக இந்திய அரசு அறிவித்ததுடன் பாகிஸ்தானியர்களுக்கான விசா சேவைகளும் இரத்து செய்யப்படுவதாகவும், இந்தியாவில் உள்ள பாகிஸ்தான் நாட்டவர்கள் உடனடியாக வெளியேற வேண்டும் என்றும் இந்திய மத்திய அரசு அதிரடியாக அறிவித்தது. இதே போல் பாகிஸ்தான் அரசு, தனது வான் வெளியில் இந்திய விமானங்கள் பறக்கத் தடை விதிக்கப்படுவதாகவும், சிம்லா ஒப்பந்தத்தை நிறுத்தி வைப்பதாகவும் அறிவிப்புகளை வெளியிட்டது.

அத்துடன் இருநாட்டு அரசுகளும் தங்கள் இராணுவ படைகளை தயார் நிலையில் வைத்திருக்கின்றன.

இந்நிலையில், இந்தியா, பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த உள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இது குறித்து அமெரிக்க அரசின் செய்தி தொடர்பாளர் டாமி புரூஸ் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்,

"அமெரிக்க பாதுகாப்புத்துறை செயலாளர் மார்க்கோ ரூபியோ இன்னும் ஓரிரு தினங்களில் இந்தியா, பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர்களுடன் பேச உள்ளார். இந்தியா, பாகிஸ்தான் விவகாரத்தை நாங்கள் உன்னிப்பாக கவனித்து வருகிறோம்.

வெளியுறவுத்துறை மட்டுமின்றி, பல்வேறு அளவுகளிலும் இருநாட்டு அரசுகளிடம் பேச உள்ளோம்." என அவர் தெரிவித்தார். (நி-8)

---

இந்தத் தாக்குதலில் 26
றுலாப் பயணிகள்
ரிழந்தனர்.
இந்தப் பயங்கரவாத
குதலுக்கு பதிலடி
டுக்க இந்தியா திட்ட
டு வருகிறது.
யங்கரவாதிகளும்
ர்களை ஆதரிப்பவர்
ம் கற்பனை செய்ய
யாத அளவுக்கு பதில
ய இந்தியா கொடுக்கும்
று பிரதமர் மோடி
ரிக்கை விடுத்திருந்தார்.

அதேநேரம் தற்போது காஷ்மீரில் உள்ள இந்தியா - பாகிஸ்தான் எல்லையில் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியில் பாகிஸ்தான் அத்துமீறி துப்பாக்கிச்சூடு நடத்தி வருகிறது.

இதற்கு இந்திய இராணுவமும் பதிலடி வழங்கி வருகிறது.

இவ்வாறு தாக்குதல்கள் இடம்பெற்று வரும் நிலையில் பாகிஸ்தான் தனது ரேடார் சிஸ்டங்களை எல்லையை நோக்கி நகர்த்தி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

மேலும் TPS-77 ரேடாரை இந்திய எல்லையில் இருந்து 58 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள சோர் கண்டோன்மென்ட் என்ற இடத்தில் பாகிஸ்தான் நிறுவியுள்ளது.

இது உலகில் உள்ள சிறந்த ரேடார்களில் ஒன்றாகும்.

இந்த ரேடாரின் சிறப்பு என்னவென்றால் பாலிஸ்டிக் ஏவுகணைகள், ட்ரோன்கள், போர் விமானங்கள் உள்ளிட்டவற்றை 463 கிலோ மீற்றர் தூரத்தில் வரும்போதே



கண்டுபிடித்து சிக்னல் கொடுக்கும்.

அதே போல் தாழ்வாக பறந்து வந்து தாக்கும் ட்ரோன், போர் விமானங்களை 150 கிலோ மீற்றருக்கு அப்பால் கண்டுபிடித்துவிடும்.

அதோடு தரைவழியாக தாக்குதல் நடத்தினாலும் இந்த ரேடாரால் கண்காணிக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணத்தின் குடித்தொகை வேறுபாடுகளும், குடியடர்த்தியும், குடிப்பரம்பலும் 1871 – 2022



**07**

வாழ்நாள் பேராசிரியர்.**பொன்.பாலசுந்தரம்பிள்ளை**
முன்னாள் துணைவேந்தர். யாழ்.பல்கலைக்கழகம்.

பிரதேச செயலக மட்டத்தில் குடியடர்த்தி வேறுபாடுகள் அட்டவணை XI இல் காட்டப்பட்டுள்ளன. இம்மாகாணத்தில் யாழ்ப்பாணப் பிரதேச செயலகப் பிரிவு எல்லாக் குடிசனக் கணிப்புக் காலங்களிலும் உயர்வான குடியடர்த்தியைக் கொண்டிருந்தது.

2012 ஆம் ஆண்டுக் குடிக்கணிப்பின் படி இம்மாகாணத்திலுள்ள 34 பிரதேச செயலகப் பிரிவுகளில் 16 பிரிவுகள் சதுர கிலோமீற்றருக்கு 100 இற்குக் குறைவான குடியடர்த்தியைக் கொண்டுள்ளன.

9 பிரிவுகள் 100 - 500, 4 பிரிவுகள் 500 - 1000, 4 பிரிவுகள் 1000-2000, ஒரு பிரிவு > 2000. குடியடர்த்தி வேறுபாடுகள் பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் மிகவும் அதிகமாகவுள்ளன. மாந்தை கிழக்கு மிகக் குறைவாக 14 ச.கி.மீ ஆகவும் யாழ்ப்பாணம் 2930 ச.கி.மீ ஆகவும் உள்ளன.

அட்டவணை XI இல் 1921 - 2022இற்கு இடைப்பட்ட 100 ஆண்டு காலத்தில் பிரதேச செயலகப் பிரிவு அடிப்படையில் மாகாணக் குடியடர்த்தியில் ஏற்பட்ட மாற்றங்கள் காட்டப்பட்டுள்ளன. (ச.கி.மீ.)

**குடிப்பரம்பல் அட்டவணை XII வடமாகாணக் குடித் தொகையில் குடாநாட்டினதும், பெரு நிலப்பரப்பினதும் பங்கு**

**அட்டவணை XII வடமாகாணக் குடித்தொகையில் குடா நாட்டினதும், பெருநிலப்பரப்பினதும் பங்கு காட்டப்பட்டுள்ளது.**

| ஆண்டு | வடமாகாணம் | குடாநாடு | | பெருநிலம் | |
|---|---|---|---|---|---|
| | | எண் | வீதம் | எண் | வீதம் |
| 1921 | 394829 | 321743 | 84.9 | 52586 | 15.1 |
| 1946 | 479572 | 416694 | 86.9 | 62872 | 13.1 |
| 1953 | 570650 | 476483 | 83.5 | 94167 | 16.5 |
| 1963 | 741841 | 580299 | 78.8 | 161042 | 21.2 |
| 1971 | 874626 | 658187 | 75.3 | 216439 | 24.7 |
| 1981 | 1111468 | 765120 | 68.8 | 346740 | 31.2 |
| 2012 | 1059202 | 591888 | 55.4 | 467974 | 44.6 |
| 2022 | 1173000 | 638801 | 54.4 | 534199 | 45.6 |

**மூலம்: இலங்கைக் குடித்தொகைக்கணிப்புகள், மாவட்டப் புள்ளிவிபரக் கைந்நூல்கள்**

1921இல் மாகாணத்தின் மொத்த குடித்தொகையில் 84.9% குடா நாட்டிலும் 15.1% பெருநிலப்பரப்பிலும் இருந்தன. இவ்விரு பகுதிகளுக்கும் இடையிலிருந்த வேறுபாடுகள் படிப்படியாகக் குறைந்து 2022இல் மாகாணக் குடித்தொகையில் 54.4% குடாநாட்டிலும் 44.6% பெரு நிலத்திலும் இருந்தன. இப்போக்குத் தொடரின் இன்னும் சில ஆண்டுகளில் பெருநிலப்பரப்பின் குடித்தொகை குடாநாட்டுக் குடித் தொகையிலும் பார்க்க அதிகரிக்கும் என எதிர் பார்க்கலாம். யாழ்ப்பாணக் குடாநாட்டின் வலிகாமம் நிலத்திணிவு 373 சதுர கிலோமீற்றர் பரப்பளவினைக் கொண்டிருந்தபோதும் மாகாணத்தின் மொத்த குடித்தொகையில் 1981 இல் 41.8% ஐயும், 2012 இல் 36% ஐயும், 2022 இல் 34% ஐயும் கொண்டிருந்தது. மேலும் யாழ்ப்பாண நகர் மையத்திலிருந்து 7 கிலோமீற்றர் சுற்றளவுக்குள் மாகாணக் குடித்தொகையில் 25% இற்கு மேல் மக்கள் வாழ்கின்றனர்.

யுத்தத்தின் காரணமாக வலிகாமம் பிரதேச வடக்குக் கரையோரப் பகுதி குடித்தொகையை இழந்து இன்று குடிப்பரம்பல் குறைவான பகுதிகளாகக் காணப்படுகின்றது. குடாநாட்டில் தென்மராட்சியில் நாவற்குழியில் இருந்து கொடிகாமம் வரை A9 வீதியை அண்டி குடிப்பரம்பல் அதிகமாகவுள்ளது. இப்பகுதியில் சாவகச்சேரி நகரில் அது செறிவாகவுள்ளது.

வடமராட்சி மேற்குப் பகுதியின் வட அரைப்பகுதியின் குடிச்செறிவு அதிகமாக இருப்பதுடன் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, நெல்லியடி, மற்றும் உடுப்பிட்டிப் பகுதிகளில் குடிச்செறிவு மிக அதிகமாகவுள்ளது. குடாநாட்டில் வடமராட்சி கிழக்கு, தீவுப் பகுதிகள், பச்சிலைப்பள்ளி, பளைப் பிரதேசங்கள் சுமாரான குடிப்பரம்பலைக் கொண்டுள்ளன.

பெருநிலப்பகுதியில் வவுனியா, நகரைச் சூழவுள்ள பகுதி, மன்னார் நகரம், முள்ளியவளை - முல்லைத்தீவு, கிளிநொச்சி நகர்ப் பகுதிகள் செறிவான குடித்தொகைப் பரம்பலைக் கொண்டன. பரந்தன் - முல்லைத்தீவு வீதி, மதவாச்சி - மன்னார் வீதி மற்றும் கண்டி வீதி ஆகிய வீதிகளை அண்டி குடிசனப் பரம்பல் காணப்படுகின்றது. வட மாகாணத்தின் மேற்கு, கிழக்குக் கரையோரங்களில் காணப்படும் மீன்பிடிக் கிராமங்கள் செறிவான குடிப்பரம்பலைக் கொண்டுள்ளன.

உதாரணமாக வங்காலை, பேசாலை, தலைமன்னார், எருக்கலம்பிட்டி, விடத்தல்தீவு, சிலாவத்தை, கொக்கிளாய், போன்ற குடியிருப்புக்களைக் குறிப்பிடலாம். பெருநிலப் பகுதிகளில் குளப்பரம்பலுக்கும் குடிப்பரம்பலுக்கும் இடையே தொடர்பு காணப்படுகின்றது. யுத்தத்தால் எல்லைக் கிராமங்கள் பல அழிவுக்குட்ப்பட்டு அங்கிருந்து மக்கள் வெளியேறி இன்று மக்களற்ற பகுதிகளாகவும் குறைந்த மக்களைக்கொண்ட பகுதிகளாகவும் காணப்படுகின்றன. குறிப்பாக வவுனியா வடக்குப் பிரதேச செயலகத்தின் வெடிவைத்தகல்லுப் பிரதேசத்தைக் குறிப்பிடலாம். பெருநிலப் பிரதேசத்தில் 55%இற்கு மேல் வனப்பகுதிகளாக இருப்பதாலும், பெரும் எண்ணிக்கையான சிறு, பெரு குளங்கள் காணப்படுவதாலும், மக்களற்ற பிரதேசம் பெருமளவாக இருக்கிறது.

தொகுத்து நோக்குகையில் இம் மாகாணம் நீண்டகாலமாக பொருளாதார வளர்ச்சி பெறாமல் இருந்துள்ளதுடன் இன்றும் தேசிய உற்பத்தியில் 4.5% தையே கொண்டுள்ளது. கடந்த 100 ஆண்டுகளாக இம் மாகாணத்திலிருந்து நாட்டின் பிறபகுதிகளுக்கும், வெளி நாடுகளுக்கும் தொழிலுக்காக, பாதுகாப்பிற்காக, குடும்ப இணைவுக்காக பல நாடுகளுக்கு மக்கள் இடம்பெயர்ந்த வண்ணம் இருக்கின்றார்கள்.

1920, 1930களில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தோர் மலாயா, சிங்கப்பூருக்குத் தொழிலுக்காக இடம்பெயர்ந்தனர். அவர்களில் ஒரு பகுதியினர் அங்கு நிரந்தரமாகத் தங்கிவிட்டனர். 1977இல் இருந்து இன்றுவரை இம்மாகாணத்திலிருந்து சர்வதேச இடப்பெயர்வு இடம்பெற்றுக்கொண்டு இருக்கின்றது. எனினும் 1980, 1990களில் ஏற்பட்டவைபோலில்லாது சிறியளவாகவே இடப்பெயர்வு இடம்பெற்றுக் கொண்டு இருப்பதைக் காணலாம்.

பல்வேறு தரவுகளின் அடிப்படையில் இம்மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் குறிப்பாக யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர்கள் உலகில் பல நாடுகளில் ஒரு மில்லியனுக்கும் மேற்பட்டவர்கள் வாழ்கின்றனர் எனக்கொள்ளலாம். நாடுகள் அடிப்படையில் அங்கு வாழும் இலங்கைத் தமிழர்களின் அண்ணளவான எண்ணிக்கைகள் பின்வருமாறு: கனடா (400,000), ஐக்கிய இராச்சியம் (200,000), பிரான்ஸ் (75,000), ஜேர்மனி (75,000), சுவிற்சலாந்து (50,000), இத்தாலி (20,000), நோர்வே (20,000), டென்மார்க் (15,000), நெதர்லாந்து (15,000), பெல்ஜியம் (10,000), ஐக்கிய அமெரிக்கா (15,000), அவுஸ்திரேலியா (50,000), நியூசிலாந்து (5000), மற்றும் இந்தியாவில் (100,000 பேர்) உள்ளனர். சிங்கப்பூர், மலேசியா தமிழர்கள் உள்ளூர் மக்களுடன் முழுமையாக ஒன்றிணைந்ததுடன், தாயகத்துடனான உறவு மிகக்குறைவெனலாம்.

இடம்பெயர்ந்த தமிழர்கள் தாங்கள் குடியேறிய நாடுகளில் மிகக்குறுகிய காலத்தில் கல்வியிலும் தொழில்களிலும் பொருளாதாரத்திலும் மிக உயர்வான நிலையை அடைந்து அந்நாடுகளின் நன்மதிப்பையும் பெற்றதுடன், அவர்களின் சமூக - பொருளாதார பண்பாட்டிற்குச் சிறப்பான பங்களிப்பினையும் நல்கி வருகின்றனர். மேலும் தாயக மக்களிற்கு அவர்கள் உதவுவதிலும் பின்நிற்கவில்லை.

குடித்தொகை வீழ்ச்சியால் இம் மாகாணம் பல்வேறு சமூக - பொருளாதார, அரசியல் பிரச்சினைக்ளை எதிர்கொண்டுள்ளது. யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் 11 அங்கத்தவர்களிலிருந்து 6ஆகக் குறைந்துள்ளது. மேலும் பல்வேறு தொழில் முயற்சிகளுக்கு உள்ளூர் வேலையாட்கள் குறைவாக இருப்பதால் பிறபகுதித் தொழிலாளர்களைக் கொண்டு வர வேண்டியுள்ளது.

பால்நிலை எண்ணிக்கை சமத்துவமின்மை. இம்மாகாணத்தில் குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிகரித்துள்ளது. மேலும் முதியோர் எண்ணிக்கை அதிகரிப்பும், இவர்களைப் பராமரிப்பதற்குக் குடும்ப அங்கத்தவர்கள் குறைவாக இருப்பதும் பெரிய சமூகப் பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளன.

போதிய பிள்ளைகள் இல்லாததால் பல பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. மேலும் பல பாடசாலைகள் மூட வேண்டிய நிலைக்கு வந்து கொண்டிருக்கின்றன. மேலும் பெருநிலப் பரப்பின் அபி விருத்தி, குடாநாட்டு மக்களை ஓரளவு ஈர்க்க முடியும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 14,000 குடும்பங்கள் வீடு அமைப்பதற்குக் காணி வேண்டுமென யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரிடம் விண்ணப்பித்திருந்தார்கள். அவர்களுக்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் காணி கொடுப்பதற்கு அரச காணிகள் மிகவும் குறைவு.

இம் மாகாணத்தின் குடிசனப் பிரச்சினைக்குத் தீர்வாக சிறிய குடும்பக் கருத்தியலை மீள்பரிசீலனை செய்ய வேண்டும். மேலும் தொழிற்துறைகளில் காணப்படும் ஆளணிப் பற்றாக்குறைவைத் தீர்க்க இயந்திரமயமாக்கல், கணணிமயமாக்கல் மற்றும் செயற்கை நுண்ணறிவைக் கூடுதலாகப் பயன்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டும்

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிமைகளை வென்றெடுக்க ஒன்றிணைவோம்-மேதின அறிக்கையில்

## யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம்

(யாழ்ப்பாணம்)

"உரிமைகளுக்காகவும், சமத்துவமான சமூக நல் வாழ்வுக்காகவும் ஒன்றிணைவோம்" என்று யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் தனது மேதின அறிக்கையில் அறைகூவல் விடுத்துள்ளது.

இன்றைய மே தினத்தை முன்னிட்டு யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம் நேற்று ஊடகங்களுக்கு அனுப்பிய ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, மே தினம் என்பது உலகம் முழுவதும் தொழிலாளர்களின் உரிமைக்குரல்கள், மற்றும் போராட்டங்களை நினைவுகூரும் நாள் மட்டுமல்ல அது எதிர்காலத்தை நோக்கி நியாயமான சமூகத்தை கட்டியெழுப்ப வேண்டிய கடமையினையும் நினைவூட்டும் நாள்.

எனவே 2025 மே தினத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர்களாகிய நாம் இலங்கை ஆசிரியர் சங்கம், வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரச தொழிற் சங்கங்கள் மற்றும் சிவில் அமைப்புக்களுடன் ஒன்றிணைந்து உழைப்பாளர்களின் உரிமைகளையும் சமத்துவமான சமூக நல்வாழ்வையும் முன்னிறுத்தி நிற்கின்றோம்.

மே தினம் என்பது இன, மத, மொழிபேதமின்றி அனைவரதும் சமத்துவத்தினையும், உரிமைகளினையும், விடுதலையையும், சமூக நல் வாழ்வையும் வலியுறுத்தும் நாளாகும். இத்தினத்தில், யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள் ஆகிய நாம் எமது மக்களின் அபிலாசைகள், நிலைத்த அபிவிருத்தி, சம உரிமை, நியாயமான தீர்வு, அடக்குமுறை அற்ற சமத்துவமான சக வாழ்வு தொடர்பில் எமது முன்னோர் வழி அஞ்சாது தொடர்ந்தும் குரல் கொடுப்போம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (6-8-33)

# வளச்சுரண்டல்கள் அடக்குமுறைக்கு எதிராக

## மன்னாரில் மேதின ஊர்வலம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அடக்குமுறை, வளச்சுரண்டல்களுக்கு எதிராகவும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரியும் மே தின நிகழ்வுகள் இன்று மன்னாரில் முன்னெடுக்கப்படவுள்ளது.

மன்னாரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது மக்கள் திட்டவரைபு ஒன்றியத்தின் வடமாகாண பொதுச் செயலாளர் ந.தேவகிருஷ்ணன் இவ்வாறு தெரிவித்தார்.


மே தின ஊர்வலம் மாலை 2 மணிக்கு மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகி வைத்தியசாலை வீதியூடாக மன்னார் பஜார் பகுதியை சென்றடையும். பின்னர் மதியம் 3 மணிக்கு மன்னார் பஜார் பகுதியில் மே தின கூட்டம் இடம்பெற உள்ளது.

இதன் போது மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அடக்குமுறைகளுக்கு எதிராகவும் வளச்சுரண்டல்களுக்கு எதிராகவும் குரல் கொடுக்கும் வகையில் மே தின நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட உள்ளது என தெரிவித்தார். (6-8-285)


## வேலை வாய்ப்புக்கள்

| | |
|---|---|
| ➢ Sales Assistant | : 0707072944 |
| ➢ Tele Calling(Fulltime,parttime,online) | : 0770079053 |
| ➢ Office Admin,Video Presenter | : 0779969661 |
| ➢ Accounts Executive (Female) | : 0772849686 |
| ➢ Counter Sales Assistant | : 0752217661 |
| ➢ Telesales Executive | : 0112572727 |
| ➢ Cafe Assistant/Cashier | : 0766587149 |
| ➢ Technician | : 0763594362 |
| ➢ Graphic Designer/ TO | : 0758800143 |
| ➢ விற்பனையாளர்கள் | : 0776653323 |
| ➢ இயற்கை வழி விவசாயி | : 0757545675 |

மேலதிக யாழ், வடக்கு, கிழக்கு, கொழும்பு, மலையக
வேலைவாய்ப்புகளுக்கு : dewmasweb.com
வேலையாட்கள் தேவையா : 0760984532
DEWMAS, 51, Amman Road, Nallur
(4073)

குரும்ப சிட்டி பொன்.பரமானந்தா மகாவித்தியாலய நிறுவுனர் பொன்.பரமானந்தரின் திருவுருவச்சிலையினை கலாநிதி ஆறு.திருமுருகன் நேற்று திரைநீக்கம் செய்து வைத்தார்.

பாடசாலை அதிபர் வசந்த ரூபன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக வலிகாம கல்வி ஆரம்பக்கல்வி பிரதிக் கல்விப்பணிப்பாளர் க.முரளிதரனும் கலந்து கொண்டார்.

இதன்போது திருவுருவச் சிலை செய்த சிற்பி க.சிறீஸ்கந்தமூர்த்தி ஆசிரியரும் கௌரவிக்கப்பட்டிருந்தார்.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 450 | 350 | 300 | 400 | 450 |
| உருளைக்கிழங்கு | 220 | 220 | 200 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 150 | 200 | 200 | 150 | 200 |
| தக்காளி | 700 | 800 | 800 | 800 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 280 | 250 | 250 | 200 |
| கோவா | 400 | 400 | 300 | 300 | 400 |
| கரட் | 800 | 600 | 650 | 550 | 600 |
| பூசணி | 160 | 220 | 200 | 150 | 250 |
| புடோல் | 150 | 300 | 200 | 250 | 300 |
| வாழைக்காய் | 100 | 80 | 100 | 70 | 150 |
| சின்ன வெங்காயம் | 280 | 100-300 | 250 | 150-300 | 350 |
| பெரிய வெங்காயம் | 120 | 140 | 120 | 110 | 120 |
| பாகற்காய் | 400 | 450 | 500 | 450 | 600 |
| வெண்டக்காய் | 350 | 250 | 200 | 250 | 500 |
| கருணைக் கிழங்கு | 350 | 400 | 200 | 200 | 300 |
| பயற்றங்காய் | 400 | 400 | 250 | 500 | 400 |
| லீக்ஸ் | 250 | 300 | 200 | 200 | 300 |
| பீற்றூட் | 500 | 600 | 350 | 450 | 600 |
| கறிமிளகாய் | 800 | 500 | 500 | 450 | 600 |
| முருங்கைக்காய் | 1800 | 2000 | 1500 | 1000-1500 | 1600 |
| போஞ்சி | 650 | 650 | 500 | 450 | 800 |
| கத்தரிதம்புள்ள | 400 | 300 | 250 | -- | 400 |
| கீரை - 1 பிடி | 120 | 70-120 | 100 | 60 | 100 |
| தேசிக்காய் | 200 | 200 | 150 | 150-200 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 280 | 180 | 120-200 | 200-240 |
| இராசவள்ளி | 650 | 650 | 600 | 500 | 700 |
| வெங்காயப்பூ | 400 | 450 | -- | -- | 800 |
| முள்ளங்கி | 120 | 160 | 150 | 150 | 300 |
| பொன்னாங்காணி | 120 | 70 | 80 | 100 | ,60 |
| வல்லாரை | 60 | 70 | 80 | 80 | 80 |
| [illegible] | 150 | -- | 100 | 100 | -- |


# துயர் பகிர்கின்றோம்

எமது மன்றத்தின் நிர்வாக உறுப்பினர்
Dr.திருமதி.தக்ஷாயினி குகன் அவர்களின் அன்புத் தாயார்



அமரர்.திருமதி. இராஜேஸ்வரி செல்வரத்தினம்

அவர்களின் மறைவையொட்டி அவர் தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

வடமாகாண ஆயுள்வேத மருத்துவர் நலன்புரி [illegible]

(சி-2866)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓய்வூதியர்களின் ஊதிய பிரச்சினைகளை தீர்க்க அரசு உடனடி நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கையில் 7 இலட்சத்துக்கும் மேற்பட்ட ஓய்வூதியர்கள் எதிர் கொள்ளும் ஊதிய பிரச்சினைகளைத் தீர்க்க அரசு உடனடியாக தலையிடும் என தொழில் பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க தெரி வித்துள்ளார்.

நிதி அமைச்சில் ஓய்வூதியர்கள் எதிர்கொள்ளும் ஊதிய முரண் பாடுகள் குறித்து முக்கிய கலந்துரையாடல் ஒன்று நேற்று நடைபெற்றது. இந்த கலந்து ரையாடலில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்ட வாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் ஓய்வூதிய சீர்திருத்தம் 2015 முதல் ஓய்வூதியம் பறிக்கப் பட்டமை மற்றும் 1997 ஆம் ஆண்டு பி.சி.பெரேரா ஆணைக்குழுவின் பரிந்துரைகள் மூலம் ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை அதிபர்களுக்கு ஏற்பட்ட ஊதிய முரண்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் விரிவாக இந்தக் கலந்துரையாடலில் ஆலோ சிக்கப்பட்டன என தெரிவிக்கப்படு கின்றது.

அத்துடன் குறித்த பிரச்சினைகள் தொடர்பாக மேலும் ஒரு சந்திப்பை நடத்த இணக்கம் காணப்பட்டுள்ளது.

மேலும், இந்தச் சந்திப்பில் அரச நிர்வாக அமைச்சு, நிதி அமைச்சு மற்றும் ஓய்வூதிய திணைக்களம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் பங் கேற்கவுள்ளனர் என்றும் தெரிய வருகிறது. (நி-8)

# தொற்றா நோய்கள் அதிகரிக்கும் அபாயம்

## சுகாதார அமைச்சு

(கொழும்பு)

நாட்டில் தற்போது தொற்றா நோய்களால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது என சுகாதார அமைச்சின் தொற்றா நோய்கள் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் சமிந்தி சமரக் கோன் தெரிவித்தார்.

தொற்றா நோய்கள் மற்றும் அவற்றினால் ஏற்படும் ஆபத்துகள் குறித்து, அடையாளம் காண அடுத்த வருடம் கணக்கெடுப்பொன்று நடத் தப்படவுள்ளது.

முன்னதாக 2021 ஆம் ஆண்டு தொற்றா நோய்கள் குறித்து கணக் கெடுப்பு நடத்தப்பட்டிருந்தது.

எனவே மீண்டும் குறித்த கணக் கெடுப்பை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வைத்தியர் சமிந்தி சமரக்கோன் தெரிவித்தார். (நி-8)

# வெளிநாட்டு கையிருப்பு அதிகரிப்பு

(கொழும்பு)

மார்ச் மாத இறுதிக்குள் உத்தி யோகபூர்வ வெளிநாட்டு கையிருப்பு 6.5 பில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளதாக பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்துள் ளார்.

அரசாங்க தகவல் திணை க்களத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித் தார். (நி-8)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1989 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
8 இல் செவ்
உயரம்: 6'2"
தகைமை/தொழில்: A/L,கனடா
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15373

பிறப்பு:1993 RC
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L,Salesman
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15374

பிறப்பு:1987 இந்து
நட்சத்திரம்:மகம்
கி.பா:20 1/2
உயரம்:5'6"
தகைமை/தொழில்: A/L, Own work
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15376

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்:அனுசம்
கி.பா: 33 1/2
உயரம்:5'6"
தகைமை/தொழில்: A/L, Shop (own)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15377

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்:ரேவதி
கி.பா:19
1 இல் செவ்
உயரம்:5'8"
தகைமை/தொழில்: BSc,MSc,Data Analyst
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: B/5378

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா:11 1/2
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: MBBS, Doctor
எதிர்பார்ப்பு: உயர்பதவி
தொ.இ: G/14824

பிறப்பு:1992 இந்து
நட்சத்திரம்:சதயம்
கி.பா: 39
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L ,தையல்
எதிர்பார்ப்பு: உத்தியோகம் ,வெளிநாடு
தொ.இ: G/14910

பிறப்பு: 1998 இந்து
நட்சத்திரம்:கேட்டை
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:A/L, Nursing course(gov)
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: G/14914

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்:சித்திரை
கி.பா: 42
உயரம்:5'4"
தகைமை/தொழில்: BBA,ER Head(pvt)
எதிர்பார்ப்பு: அரச/தனியார் தொழில்
தொ.இ: G/14916

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்:கேட்டை
உயரம்:4'9"
தகைமை/தொழில்: O/L, A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு, உள்நாடு
தொ.இ: G/14788

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இராசிபலன்

01.05.2025
சித்திரை18, வியாழக்கிழமை
சதுர்த்தி பிற்பகல் 4.52 மணிவரை
மிருகசீரிடம் முன்னிரவு 7.32 மணிவரை

சுபநேரம் 7.27-8.57 மணிவரை
இராகுகாலம் 1.27-2.57மணிவரை
சதுர்த்தி விரதம்,
தொழிலாளர்கள் தினம்

சந்திராஷ்டமம்
விசாகம், அனுஷம்.

வளவன்

**மேஷம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவமொன்று நடைபெறலாம், பகையொன்று நட்பாகலாம், சவால்களை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், போசன சுகமுண்டு.

**ரிஷபம்** பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும்,வருமானம் திருப்தி தரும்வகையில் அமையும்,தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.

**மிதுனம்** கற்பனை மிகுதியான நாள்,விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.உடல்ரீதியான வியாதிகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும்.

**கடகம்** சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்,வழிபாட்டால் முன்னேற்றம் காணவேண்டிய நாள், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள்.

**சிம்மம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்,தொழில் வருமானத்தை அதிகரிக்க புதியதிட்டங்கள் தீட்டுவீர்கள்,பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**கன்னி** தொழிலில் புதிய திட்டங்கள் தீட்டி ஆதாயம் காண முற்படுவீர்கள், காலைப் பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்,நண்பர்களின் சந்திப்பில் பரவசமடைவீர்கள்.

**துலாம்** உறவினர் வழியில் மனம் நிறைவான செய்திகள் வந்து சேரலாம்,பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.

**விருச்சிகம்** எடுத்த காரியங்களில் சிறுதடை தாமதங்கள் என்பன இடம்பெறலாம், பயணங்களினால் மனச் சோர்வு ஏற்படலாம், பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள்.

**தனுசு** குடும்பத்தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும்,வெளியூர் பயணங்களினால் நன்மையுண்டு, நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு.

**மகரம்** வங்கிச்சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப் புண்டு, எதிரிகளாக இருந்தவர்கள் மனம் மாறுவர்,போசன சுகமுண்டு.

**கும்பம்** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தன்னம்பிக்கையுடன் செயற்பட்டுக் காரியம் சாதிப்பீர்கள், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**மீனம்** தொலைபேசி வழியில் கேட்கும்செய்திகளால் உற்சாகமடைவீர்கள், புதிய நபர்களின் சந்திப்பில் நன்மையுண்டு, செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள்,போசன சுகமுண்டு.

எந்த பிரச்சினையையும் மென்மையாக அணுகுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் வாழ்க்கைப் பயணத்தில் முன்னேறுவதற்கான வழியைப் புலப்படுத்தும் உள்ளுணர்வே தன்னம்பிக்கையாகும். ~ அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## உழைப்பாளர் வர்க்கம் உறிஞ்சப்படுகிறது

இன்று மே முதலாம் திகதி. இந்நாளை உலகம் முழுமையும் உழைப்பாளர் தினமாகக் கொண்டாடுகின்றது.

ஆம், முதலாளித்துவ வர்க்கத்தால் அடிமைப்படுத்தப்பட்ட தொழிலாளர்கள் உரிமை பெற்ற நாளாக மே முதலாம் திகதி அமைவதன் காரணமாக, தொழிலாளர் தினமாக இந்நாள் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

மானிய கால சமுதாயத்தில் ஆண்டான் – அடிமை முறைமை காணப்பட்டபோது, தொழிலாளர்களின் உரிமைக்காக எழுந்த போராட்டம் தொழிலாளர்களின் உரிமையை நிலைநாட்டியது.

இதன் விளைவாக தொழிலாளர்களின் வேலை நேர வரையறை, ஊதிய வரையறை, தொழிலாளர்களின் நலன்கள், அவர்களுக்கான சேமலாப நிதியங்கள் என்பன சட்டமாக்கப்பட்டுள்ளன.

எனினும் ஏதோவொரு வகையில், தொழிலாளர்கள் உறிஞ்சப்படுகின்றனர் என்பதை நாம் ஏற்றுத்தானாக வேண்டும்.

அதாவது உழைப்புக்கான மணித்தியாலம் மற்றும் வேதனம், அடிமைத்தனம் என்ற வகையில் தொழிலாளர்களின் உரிமைகள் நிலைநாட்டப்பட்டாலும் விவசாயம், கடற்றொழில் உள்ளிட்ட துறைகளில் முயற்சி செய்கின்றவர்களின் உழைப்பு ஏதோவொரு வகையில் அவர்களிடம் இருந்து தட்டிப்பறிக்கப்படுகிறது.

இதற்கு நல்ல உதாரணம் நம் விவசாயிகள். ஆம் கடுமையாகப் பாடுபட்டு நீர்பாய்ச்சி பயிர் செய்து அவற்றிலிருந்து நெல், மரக்கறி, சிறுதானியம் என்பவற்றை உற்பத்தி செய்தால், குறித்த விவசாயிகளிடமிருந்து குறித்த விவசாய விளைபொருட்கள் மிகக் குறைந்த விலைக்குக் கொள்வனவு செய்யப்படுகின்ற அநியாயத்தை நாம் நேரில் பார்க்கின்றோம்.

உண்மை. விவசாயிகளிடம் இருந்து மிகக் குறைந்த விலைக்குக் கொள்வனவு செய்யப்படுகின்ற உணவுப் பொருட்கள் மிக உயர்ந்த விலைக்கு விற்கப்படுகின்றன.

இங்குதான் அடக்குமுறை – பொருளாதார உறிஞ்சல் – உழைப்புக்கேற்ற வருமானம் இன்மை என்ற பல்வேறு பிரச்சினைகள் எழுகை பெறுகின்றன.

ஆக, இன்று நாம் தொழிலாளர் தினமாக மே தினத்தைக் கொண்டாடினாலும் அன்று தொழிலாளர்கள் அனுபவித்த அடிமைத்தனங்கள் இன்றில்லையேயன்றி, மற்றும்படி ஏதோவொரு வகையில் நம் உழைப்பாளர் வர்க்கத்தின் உழைப்பு அவர்களிடம் இருந்து தட்டிப்பறிக்கப்படுகிறது.

இந்த அநியாயத்தை எதிர்த்துக் குரல் கொடுத்து உழைப்பாளர்களை – விவசாயிகளைக் காப்பாற்றினால் மட்டுமே மேதினம் அர்த்தமுடையதாக இருக்கும்.

## விமர்சனங்களை மட்டும் முன் வைக்காமல் ஊழல் மோசடிகளை நிரூபியுங்கள்

### அநுர அரசுக்கு பெரமுன சவால்

(கொழும்பு)

நாட்டில் பெரியளவில் ஊழல், மோசடிகள் இடம்பெற்றதாகத் தேசிய மக்கள் சக்தி பரப்புரை செய்கின்றது. எனவே விமர்சனங்களை மட்டும் முன்வைக்காமல் இவை தொடர்பில் விசாரணை நடத்தி உண்மையை வெளிப்படுத்த வேண்டும். இதை ஒரு சவாலாக அரசு எடுக்க வேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நேற்று ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும் பொதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

பொய்கள் மற்றும் வன்மங்களை விதைத்தே தேசிய மக்கள் சக்தி பிரசாரம் செய்தது. போலியான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

தற்போது ஆட்சி அதிகாரம் கிடைத்தும் பழைய பாணியிலேயே பரப்புரைகளை முன்னெடுக்கின்றனர்.

ஆட்சியும் உங்களிடம் உள்ளது. அதிகாரமும் உங்களிடம் உள்ளது.

எனவே ஊழல்களும் மோசடிகளும் இடம்பெற்றிருந்தால் அவற்றை நிரூபித்துக் காட்டுங்கள்.

இதை ஒரு சவாலாக அரசுக்குக் கூறிக்கொள்கின்றோம். வேகமாக வளர்ச்சியடைந்த நாட்டை தேசிய மக்கள் சக்தியே நாசமாக்கியது. இதற்காக "பொய்" எனும் ஆயுதம் பயன்படுத்தப்பட்டது எனக் குறிப்பிட்டுள்ளார். (ம-4,7)

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்காவிடின் ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச் சலுகைக்கு ஆபத்து

### அரசுக்கு ஹர்ஷ டி சில்வா எடுத்துரைப்பு

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் நிகழ்நிலை காப்புச் சட்டம் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிக்கமைய செயற்பட வேண்டியது தற்போது அத்தியாவசியமானதாகும். அல்லாவிடத்து மீண்டும் ஜி.எஸ்.பி.பிளஸ் வரி சலுகைக்காக விண்ணப்பிப்பதில் இது நேரடியாகத் தாக்கம் செலுத்தும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஐரோப்பிய ஒன்றியத் தூதுக் குழுவினருடனான நேற்றைய கலந்துரையாடலின் பின்னர் இதுகுறித்து மேலும் கருத்துரைத்த அவர்,

"இலங்கைக்கான ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச் சலுகை தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியத் தூதுக்குழுவுடன் சிறந்த சந்திப்பொன்று இடம்பெற்றது. நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல வரிச்சலுகை 2027 ஆம் ஆண்டுக்குள் முடிவடையும். நாம் அதற்கு மீண்டும் விண்ணப்பிக்க வேண்டும்.

நான் இருமுறை சரி பார்த்தேன். அதிகரிப்புக் கோர எந்த ஒதுக்கீடும் இல்லை. எனவே நாம் செய்ய வேண்டியது பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் நிகழ்நிலை காப்புச் சட்டம் ஆகியவற்றை நீக்குவது தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவதாகும்" என்றார். (ம-7)

## உழைப்பாளர் தினத்தில் இரத்ததான முகாம்

சர்வதேச உழைப்பாளர் தினத்தை முன்னிட்டு ஏழாலை இந்து இளைஞர் சபையினரின் ஏற்பாட்டில் மாபெரும் இரத்ததான முகாம் நிகழ்வு இன்று வியாழக்கிழமை (01) காலை 08.30 மணி தொடக்கம் பிற்பகல் 02 மணி வரை ஏழாலை மேற்கு உதய சூரியன் சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ம-7)

## கஞ்சா சாகுபடியில் ஈடுபட்டவர் கைது

(பதுளை)

பதுளை - இட்டினாம்பலப் பகுதியில் கஞ்சா பயிர்ச்செய்கையில் ஈடுபட்ட நபரொருவர் மடுல்சீமைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மடுல்சீமைப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பிலேயே குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து 7 முதல் 9 அடி உயரங்களை உடைய 19 கஞ்சாச் செடிகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலதிக விசாரணைகளின் பின் சந்தேக நபரை பசறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-7)

## ஆண்டின் முதல் 4 மாதங்களில் மட்டும் டெங்கு நோயால் அறுவர் உயிரிழப்பு

(கொழும்பு)

இவ் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் 17 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அதில் 6 பேர் உயிரிழந்துள்ளதாகவும் சுகாதார அமைச்சின் தொற்று நோய்ப்பிரிவின் பணிப்பாளர் விஷேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

டெங்கு நோயால் மேல் மாகாணம் தொடர்ந்து அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அங்கு 46 சதவீதமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஏப்ரல் மாதத்தில் மட்டும் மொத்தம் 5 ஆயிரத்து 18 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் 985 பேர் இரத்தினபுரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாவர்.

டெங்குக் காய்ச்சலின் அறிகுறிகள் ஏதும் ஏற்படின் பொதுமக்கள் எந்நேரமும் மருத்துவ உதவியை நாட முடியும். கர்ப்பிணித் தாய்மார்களுக்கு காய்ச்சல் மற்றும் டெங்கு காய்ச்சலின் அறிகுறிகள் தென்பட்டால் தாமதிக்காது 24 மணி நேரத்திற்குள் வைத்தியரை நாட வேண்டும் என்றார்.

இதேவேளை டெங்கு, சிக்குன்குன்யா போன்ற நோய்கள் பரவுவதைத் தடுக்கவும் சமூக சுகாதாரம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்யவும் நுளம்புகள் பெருகும் இடங்களைச் சுத்தம் செய்யுமாறு சுகாதார அதிகாரிகள் பொதுமக்களை வலியுறுத்துகின்றனர். (ம-7)

## நாட்டில் பணவீக்கம் மீண்டும் ஏறுமுகம்

(கொழும்பு)

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணுக்கமைய நாட்டின் முதன்மைப் பணவீக்கம் -2.0% ஆக அதிகரித்துள்ளதாக மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதத்தில் இது -2.6% ஆக பதிவாகியிருந்தது.

இதற்கமைய உணவுப் பிரிவில் மார்ச் மாதத்தில் 0.6% ஆக இருந்த பிரதான பணவீக்கம் ஏப்ரல் மாதத்தில் 1.3% ஆக அதிகரித்துள்ளது.

மேலும் மார்ச் மாதத்தில் -4.1% ஆக இருந்த உணவு அல்லாத வகையின் பிரதான பணவீக்கம் ஏப்ரல்மாதத்தில் -3.6% ஆக அதிகரித்துள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகு–கேது பெயர்ச்சி பலன்கள்

## 26.04.2025–12.11.2026 வரை



இதுவரை உங்கள் இராசிக்கு 9 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த ராகு பகவான், 26.4.2025 அன்று அஷ்டமத்திற்கு வரப்போகிறார். அந்த நேரம் கேது பகவான் உங்கள் இராசிக்கு 3 ஆம் இடத்தில் இருந்து வாக்கு, தனம்,

குடும்பம் ஆகியவற்றைக் குறிக்கும் இடமான 2 ஆம் இடத்திற்கு வரப்போகிறார். அங்கு சுமார் 11/2 ஆண்டு காலம் வீற்றிருந்து உரிய பலன்களை வழங்குவார். மறைந்த

## அஷ்டம ஸ்தானத்தில் ராகு ஆரோக்கியத்தை கவனித்துப் பாரு!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

ராகுவால் நிறைந்த தன லாபம் கிடைக்கும்.

பெயர்ச்சியாகும் ராகு அஷ்டம ஸ்தானததிற்கு வருகிறார். எனவே மிகுந்த கவனத்தோடு செயற்பட வேண்டிய நேரம் இது மனோபயம் அதிகரிக்கும். எதிர்மறை சிந்தனை வந்து கொண்டே இருக்கும். அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சியிலும் ஆதாயம் குறைவாகவே கிடைக்கும். எதையும் திட்டமிட்டு செய்ய இயலாது. பல வேலைகள் அரைகுறையாகவே நிற்கும். உத்தியோகத்தில் உங்கள் திறமைக்குரிய அங்கீகாரம் கிடைக்காது.

**குருசாரத்தில் ராகு சஞ்சாரம் (26.4.2025 முதல் 31.10.2025 வரை)**

பூரட்டாதி நட்சத்திரக் காலில் குரு சாரத்தில் ராகு பகவான் சஞ்சரிக்கும் பொழுது, வருமானம் திருப்திகரமாக இருக்கும். எதிலும் விரைந்து செயற்பட்டு வெற்றிகளைக் குவிப்பீர்கள். குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். அரசு வேலைக்கு விண்ணப்பித்தவர்களுக்கு அது கைகூடும்.

சொத்துக்கள் வாங்குவதிலும், விற்பதிலும் மும்முரம் காட்டுவீர்கள். சொந்தத் தொழில் செய்பவர்கள் நடக்கும் தொழிலை யாரிடமேனும் ஒப்படைத்து விட்டு புதிய தொழில் தொடங்குவதற்கான முயற்சியில் ஆர்வம் காட்டுவர்.

**சுய சாரத்தில் ராகு சஞ்சாரம் (1.11.2025 முதல் 9.7.2026 வரை)**

சதய நட்சத்திரக் காலில் தனது சுயசாரத்தில் ராகு பகவான் சஞ்சரிக்கும் பொழுது, மிக மிக கவனத்துடன் செயற்பட வேண்டும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். அரசு வழி தொல்லைகளை சந்திக்க நேரிடும் பகைக்கு மத்தியில் வாழ்க்கை அமையும் நேரம் இது,

எந்த நேரமும் விழிப்புணர்ச்சியோடு இருக்க வேண்டும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. மனச்சோர்வு அதிகரிக்கும். குடும்ப ஒற்றுமை குறையும், செயற்பாடுகளில் நினைத்தது ஒன்றும், நடந்தது ஒன்றுமாக இருக்கும்.

**செவ்வாய் சாரத்தில் ராகு சஞ்சாரம் (10.7. 2026 முதல் 12.11.2026 வரை)**

அவிட்ட நட்சத்திரக்காலில் செவ்வாய் சாரத்தில் ராகு பகவான் சஞ்சரிக்கும்பொழுது, நல்ல சந்தர்ப்பங்கள் நாடி வரும். பூர்வீக சொத்துக்கள் சம்பந்தமாக ஏற்பட்ட பஞ்சாயத்துக்கள் சாதகமாக முடியும். புதிய சொத்துக்கள் வாங்கும் யோகமும் உண்டு. திட்டமிட்டு செயற்பட்டு வெற்றி காண்பீர்கள். பொன், பொருள் சேர்க்கை அதிகரிக்கும். மகன் அல்லது மகளுக்கு வேலை கிடைத்து அதன் மூலமும் வருமானம் வரலாம். நினைத்தது நிறைவேறும் நேரம் இது புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்துசேரும்.

**சூரிய சாரத்தில் கேது சஞ்சாரம் (26.4.2025 முதல் 27.6.2025 வரை)**

உத்தரம் நட்சத்திரக் காலில் சூரிய சாரத்தில் கேது சஞ்சரிக்கும் போது, கொடுக்கல்-வாங்கல் சீராகவும், சிறப்பாகவும் இருக்கும். வருமானம் உயர புதிய யுக்திகளை கையாளுவீர்கள். குடும்ப சுமை கூடினாலும், அதை சமாளிக்கும் ஆற்றல் பிறக்கும். குடும்பத்தில் நீண்ட நாட்களாக எதிர்பார்த்து காத்திருந்த மங்கல ஓசை கேட்கும் வாய்ப்பு உருவாகும். அரசு வழி அனுகூலம் கிடைக்கும். அரசியல் களத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்த நன்மை உண்டு, மின்சாதன பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். வீடு கட்டு வது அல்லது வீடு வாங்குவது கைகூடும் பொதுவாழ்வில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளும், பதவிகளும் கிடைக்கலாம்.

**சுக்கிர சாரத்தில் கேது சஞ்சாரம் (28.6.2025 முதல் 5.3.2026 வரை)**




பூரம் நட்சத்திரக்காலில் சுக்கிர சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, பொருளாதாரம் திருப்திகரமாக இருக்கும். புதிய முயற்சிகள் அனைத்திலும் வெற்றி கிடைக்கும். அச்சுறுத்தும் நோய்கள் அகலும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் வந்து கொண்டே இருக்கும். சிநேகிதர்கள் உங்கள் பணிகளுக்கு உறுதுணையாக இருப்பர். உதிரிகளாய் கிடந்த உறவுகள் ஒட்டிக் கொள்ளும் நேரம் இது. உத்தியோகத்தில் உங்கள் முன்னேற்றத்திற்கு இடையூறாக இருந்தவர்கள் விலகுவர். மருத்துவச் செலவுகள் குறையும். பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் மீண்டும் பணியில் சேர வாய்ப்பு உண்டு. குடும்பத்துடன் புனித பயணங்களை மேற்கொள்வீகள்.

**சுய சாரத்தில் கேது சஞ்சாரம் (6.3.2026 முதல் 12.11.2026 வரை)**

மகம் நட்சத்திரக் காலில் சுய சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, உழைப்புக்கேற்ற பலன் கிடைக்காது. சொத்து பிரச்சினைகளால் சொந்தங்கள் விலகிச் செல்லும். கொடுக்கல்-வாங்கலில் தடுமாற்றங்கள் ஏற்படும். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலாது. வாங்கிய சொத்துக்களாலும் பிரச்சினை, விற்ற சொத்துக்களாலும் பிரச்சினை என்ற நிலை உருவாகும். வருமான தடை அகல வழிபாடு உங்களுக்குத் தேவை.

**சனிப்பெயர்ச்சி காலம்**

6.3.2026 அன்று சனி பகவான், மீன இராசிக்கு பெயர்ச்சியாகி செல்கிறார். இக்காலம் ஒரு பொற்காலமாக அமையும். இதுவரை உங்கள் இராசிக்கு அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் இருந்தது. இப்பொழுது அது விலகிவிட்டது. எனவே இனி தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொல்லைகள் அனைத்தும் தீரும். பட்ட கஷ்டங்கள் அகலும், பணவரவு வந்து குவியும். குடும்ப ஒற்றுமை பலப்படும். கொடுக்கல் - வாங்கல்கள் சீராகும். இதுவரை எவ்வளவோ பிரயாசை எடுத்தும் முடிவடையாத காரியங்கள் இப்பொழுது முடிவடையும். தொழிலில் பழைய பங்குதாரர்களை விலக்கிவிட்டு புதியவர்களை சேர்த்து கொள்ள முன்வருவீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த பலன் கிடைக்கும்.

**குருப்பெயர்ச்சி காலம்**

ராகு - கேது பெயர்ச்சி காலத்தில் குருப்பெயர்ச்சி நிகழ்கிறது. வருகிற 11.5.2025 அன்று குரு பகவான் மிதுன இராசிக்கு பெயர்ச்சியாகிறார். இதன் விளைவாக உத்தியோகத்தில் எதிர்பார்த்த மாற்றம் கிடைக்கும். அதிகார அந்தஸ்திற்கு உயர்த்தப்படுவீர்கள். நிலம், பூமி விற்பனையால் லாபம் கிடைக்கும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. தொழிலில் ஏற்பட்ட இழப்புகளை ஈடு செய்ய எடுத்த புது முயற்சி பலன் தரும். ஒக்டோபர் 8 ஆம் திகதி மீண்டும் கடக ராசிக்கு குரு வருகிறார்.

அப்பொழுது உங்கள் எண்ணங்கள் அனைத்தும் ஈடேறும். எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். கல்யாண வாய்ப்புகள் கைகூடும். பெற்றோர் வழி ஆதரவோடு பிரச்சினையில் இருந்து விடுபடுவீர்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதுபான...

உலக தொழிலாளர் தினத்திற்காக இன்று மே தினப் பேரணிகள் நடைபெறும் பிரதேச செயலகப் பிரிவுகளில் இயங்கும். இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைக்கப்பட்ட ஹோட்டல் உரிமங்கள் (R.B. 07/08, புட்டிக் விலா அனுமதிப் பத்திர பகுதிகளின் சுற்றுலாப் பயணிகளுக்கு மட்டும்) தவிர, அனைத்து சில்லறை மதுபானசாலைகளும் மூடப்பட வேண்டும் என அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7,4)

## பல்கலைக்கழக...

வர்களுக்கும் மூன்று நாட்கள் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 5ஆம், 6ஆம், 7ஆம் திகதிகளில் அனைத்துப் பல்கலைக் கழகங்கள், வளாகங்கள் மற்றும் நிறுவகங்களில் பயிலும் இளமாணி மற்றும் பட்டமேற்கல்வி மாணவர்களுக்கு உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முன்னிட்டு விடுமுறை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகப் பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் கபில செனவிரத்ன தெரிவித்துள்ளார். (ம-7,4)

## இலங்கை மீள...

என்று இலங்கைக்கான சீனத் தூதுவர் கி ஷென் ஹொங் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

எந்தப் பொருளாதாரப் புயலாலும் பாதிக்கப்படாத வலுவான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டியது இலங்கை அரசின் முன்னுரிமைக்குரிய விடயமாக உள்ளது. அமெரிக்காவின் வரி விதிப்புகள் செல்வந்த நாடுகளுக்கும் வறிய நாடுகளுக்கும் இடையிலான ஏற்றத்தாழ்வை மேலும் அதிகரிக்கும்.

மிகவும் வறிய நாடுகள் மோசமான தாக்கத்தை எதிர்கொள்ளும். மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட நாடு என்ற வகையில் அபிவிருத்திக்கான இலங்கையின் உரிமை குறைமதிப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன. இலங்கையின் பலவீனமான பொருளாதாரத்தின் மீது அதிகளவு அழுத்தங்கள் முன்வைக்கப்படுகின்றன.

அமெரிக்கா தனது மேலாதிக்கத்தையும் அதிகார அரசியலையும் முன்னெடுப்பதற்காக வரிகளைப் பயன்படுத்துகின்ற சூழ்நிலையில், இலங்கையின் அபிவிருத்திக்கு ஆதரவளிக்கவும், உலகளாவிய வர்த்தகப் பதற்றங்களை எதிர்கொள்வதற்கும் சீனா முழுமையான உதவிகளை இலங்கைக்குச் செய்யும் என்றார். (ம-7,4)

## பெற்றோல்...

அதன் புதிய விலை 341 ரூபாயாகும்.

இதேவேளை 286 ரூபாயாக இருந்த ஒட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலை 12 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 274 ரூபாயாகும்.

இதேவேளை 331 ரூபாயாக இருந்த சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 6 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 325 ரூபாயாகும்.

மேலும் மண்ணெண்ணெய் 05 ரூபாயினால் குறைக்கப்பட்டு 178 ரூபாயாகவும் விற்பனை செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,4)

## ஜி.எஸ்.பி...

இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால நட்புறவு, வர்த்தக ரீதியான பல வெற்றிகளை அடைய உதவியுள்ளது. தொடர்ந்தும் வர்த்தக வெற்றிகளை அடைய இலங்கைக்கு ஆதரவளிக்கத் தயாராக இருப்பதாகவும் சார்ல்ஸ் வைட்லி தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி பிளஸ் சலுகை தரப்படுத்தப்பட்ட மற்றும் தரமான பொருட்களை விநியோகிக்க இலங்கைக்கு மேலும் ஊக்கமளிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தெற்காசியத் தலைவர் சார்ல்ஸ் வைட்லி குறிப்பிட்டார்.

அத்துடன் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகையை வழங்க, கருத்தில் கொள்ளப்படும் அளவுகோல்கள் தற்போதைய அரசாங்கத்தின் கொள்கைகளுடன் ஒத்துப் போகின்றன என்றும் சார்ல்ஸ் வைட்லி தெரிவித்தார். (ம-7,4)

## வியாபார...

ஒருவரின் சகோதரனும் தபால் ஊழியர் ஒருவரும் பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் தெரிவிக்கையில்,

வவுனியா, பூந்தோட்டம் பகுதியில் உள்ள பலசரக்கு வியாபார நிலையம் ஒன்றில் ஒரு தொகை உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்குரிய வாக்காளர் அட்டைகள் இருப்பதாகத் தேர்தல் திணைக்களத்திற்கு முறைப்பாடு ஒன்று கிடைக்கப் பெற்றுள்ளது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற அதிகாரிகள் மற்றும் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்ததுடன் அங்கிருந்து ஒரு தொகை வாக்காளர் அட்டைகளை மீட்டுள்ளனர். அதனை உடமையில் வைத்திருந்த குற்றத்திற்காக அவ் வட்டாரத்தில் ஆளும் கட்சியில் போட்டியிடும் வேட்பாளரின் சகோதரனான வியாபார நிலையத்தின் உரிமையாளர் கைது செய்யப்பட்டதுடன் அந்தப் பகுதிக்குரிய தபால் ஊழியரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இருவரையும் நீதிமன்றத்தில் முற்படுத்திய நிலையில் எதிர்வரும் 6ஆம் திகதி வரை அவர்களுக்கு விளக்கமறியல் உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,4,250)

## இந்...

களால் 26 பேர் சுட்டுக்கொலை செய்யப்பட்டதிலிருந்து இந்தியா - பாகிஸ்தான் இடையே பதற்றங்கள் அதிகரித்து வருகின்றன.

இராணுவத் தளபதிகளுடன் ஆலோசனை நடத்திய இந்தியப் பிரதமர் மோடி, பதிலடி கொடுக்க இராணுவத்துக்கு முழுச் சுதந்திரம் வழங்கியுள்ளதாக இந்திய அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையிலேயே அடுத்த 24 மணி முதல் 36 மணி நேரத்துக்குள் இந்தியா இராணுவத் தாக்குதலை நடத்தத் திட்டமிடுவதாக தங்கள் உளவுத்துறை எச்சரித்துள்ளதாகப் பாகிஸ்தானின் தகவல் ... [illegible]

அமைச்சர் அத்தாவுல்லா தாரார் தெரிவித்துள்ளார். (ம-7,4)

## சரியான...

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிற்கும் இடையில் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

இதன்போது இலங்கை பொருளாதார ரீதியில் சரிவடைவதற்குக் கடந்த ஆட்சியாளர்களின் அரசியல் முறையும் வீண்விரயமும் மோசடியுமே காரணமாக அமைந்திருந்தது எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி,

இப்போது நாடு மீண்டும் சரியான நிர்வாகத்தைக் கொண்டதாக மாற்றப்பட்டு வருவதாகவும் அதற்குச் சிறிது காலம் அவகாசம் அவசியம் என்பதையும் வலியுறுத்தினார்.

அத்துடன் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் சரியான முறையில் நிறைவேற்றப்படும் என்றும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க உறுதியளித்தார். (ம-7,4)


மஹஜன சம்பத — திகதி 2025.04.30 — சீட்டிழுப்பு இலக்கம் 5817 — U 2 7 6 7 5 8
அத சம்பத — U 6 7 5 8 — சீட்டிழுப்பு இலக்கம் 0392

தன நிதானய — திகதி - 2025.04.30 — சீட்டிழுப்பு இலக்கம் - 1846 — O 04 21 42 52 O — 09744

மெகா பவர் — திகதி 30/04/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2165 — V 18 06 14 18 22

ஜய — திகதி 2025.04.30 — சீட்டிழுப்பு இலக்கம் 085 — C 0 1 7 5

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4059 — சீட்டிழுப்பு திகதி 30.04.2025 — T 04 68 71 73 — T

ஹந்தஹன — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.04.30 — சீட்டிழுப்பு இலக்கம் 1126 — தனுசு 04 17 20 49 தனுசு — 65365 — 39

உத்தியோகபூர்வ முடிவுகள் — சுபிரி வாசனா — 30.04.2025 — வெற்றி வாரம் 525 — H 1 3 6 4 3 9 — 95364 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.36,398,606.40

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2791 — சீட்டிழுப்பு திகதி 2025.04.30 — தினம் புதன்கிழமை — 03 12 35 45 T — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.59,226,399.20

சனிதா — திகதி 30.04.2025 — வெற்றி வாரம் 4952 — 14 27 59 67 S — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 62,140,246.00 — 83197

ஜயோதா — திகதி 2025.04.30 — வெற்றி வாரம் 2123 — 07 23 26 28 Z — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 29,141,092.00

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4503 — சீட்டிழுப்பு திகதி 30.04.2025 — தினம் புதன்கிழமை — 10 23 34 58 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,895,546.00 — 149865

கப்ருக — P 23 06 08 39 63 — 1967 — 30.04.2025 புதன்கிழமை

அட கோடிபதி — புதன்கிழமை — வெற்றி வாரம் : 2617 — சீட்டிழுப்பு திகதி : 2025.04.30 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,899,371.20 — 17 31 57 62 Z — 280539



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DCM - யாழ்.நகர்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



1ᵗʰ நிலை (கலைப்பிரிவு)
(யா/வேம்படி மகளிர் கல்லூரி)
**ம.மயூரா**



1ᵗʰ நிலை (வர்த்தகப்பிரிவு)
(யாழ் இந்துக் கல்லூரி)
**வி.வாரணன்**

DCM கல்வி நிறுவனத்தில் ஆரம்பத்திலிருந்து மூன்று பாடங்களையும் வரன்முறையாகக் கற்று எமக்கும் எமது நிறுவனத்திற்கும் பாடசாலைக்கும் பெருமை தேடித் தந்த மாணவச் செல்வங்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு ஏனைய மாணவர்களையும் பாராட்டி மென் மேலும் சிறக்க வாழ்த்துகின்றோம்.

Best Wishes!

(C-2857)

**DCM சமூகம், யாழ் நகர்.**

# வைத்தியம்

வலிப்பு நோய்| கை விறைப்பு| நாட்பட்ட தலைவலி| மூலம் | கழுத்து வலி | கால் பாத விறைப்பு| முள்ளந்தண்டு வலி | முழங்கால், குதி வலி Sciatica | Rheumatic Arthritis | நாட்பட்ட சளி தலைக்கு இரத்தம் போகாமை, வாதம்
நம்பிக்கையான மூலிகை, Acu சிகிச்சைகள்
நல்லூர், யாழ்ப்பாணம்.
Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)
தொடர்புகளுக்கு : **0777 301 669**

(1079)

# Pearson International College



- இலங்கையில் முதன்முறையாக TESL தகைமையுடைய கனடா விரிவுரையாளர்கள் வழங்கும் கனடா அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட IELTS மற்றும் Diploma கற்கை நெறிகள்.
- தற்போது O/L எழுதிய மாணவர்களுக்கான Basic English, Dip in English நடைபெறுகின்றது.
- கற்பித்தல் உங்களுக்கு திருப்திகரமானதாக இல்லையெனில் 100% money back Guarantee
- எம்மிடம் கல்வி கற்று Band 7 க்கு மேல் பெற்ற மாணவர்களின் பெறுபேறுகளை பார்த்து உறுதி செய்யுங்கள்.
- இப்போது யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவில் வட மாகாணத்தில் No. 1 IELTS Coaching

**074 188 7878, 074 385 7584**
www.picsl.lk

TESL CANADA — TESL Ontario

(1009)


## பாகிஸ்தானில் நிலநடுக்கம்

பாகிஸ்தானில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

குறித்த நிலநடுக்கமானது இரவு 9.58 மணியளவில் (இலங்கை நேரப்படி) பதிவாகியுள்ளது.

இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 4.4 ஆகப் பதிவாகியுள்ளது என அந்நாட்டு தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நில நடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் மற்றும் பாதிப்பு குறித்து எந்தவித தகவலும் வெளியாகவில்லை. (ம-4,7)


# வாகனம் வாடகைக்கு தேவை

பட்டா ரக வாகனம் அல்லது வான் மாத வாடகைக்குத் தேவை.

**075 829 3256**
**077 635 4224**

(4066)

# இன்றே விற்பனைக்கு

சாப்பாட்டுக்கடைக்குரிய பாவனைப் பொருட்கள் யாவும் உண்டு.
நேரில் பார்வையிடலாம்

**077 629 0894**

(4074)

# TECHNO WORLD

## A/L தொழில்நுட்பப் பிரிவு

10 வது ஆண்டில் தடம் பதிக்கின்றது

**A/L 2024 (Day Class)**
ஆரம்பம் - 02.05.2025
நேரம் - மாலை 2.30

வெலிங்டன் சந்தி,
பெருமாள் கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு : **077 017 5346**

(C-2856)

● தேர்ச்சி ● அனுபவம் ● ஆளுமை

# A/L - 2027

## புவியியல் - N.BABU

27 வருட கற்பித்தல் அனுபவம் கொண்ட ஆசிரியர்

- DMI - ஸ்ரான்லி வீதி, யாழ்நகர்
- C.C.A - சுன்னாகம்
- மொடேண் - சண்டிலிப்பாய்
- தமிழியற்கல்லூரி - கோப்பாய்
- ஆட்ஸ் அக்கடமி - புத்தூர்

தொடர்புகளுக்கு **077 936 5087**

(C-2862)

# சேல்ஸ்மன் தேவை

யாழ். நகரில் இயங்கும் எமது பிடவை நிறுவனத்திற்கு O/L, A/L படித்த தொழில் பழக ஆர்வம் உள்ள ஆண்கள் தேவை.
(மதிய உணவுடன்)

**சிவகணேசன் TEX**
41, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

(4078)

# மணமகன் தேவை

இந்து, கௌரவ குடும்பம், 1982, பூசநட்சத்திரம், 2ல் செவ்வாய், 10 ¾ கிரகபாவம், BSc(Hons) Accounting, MBA (Finance). Manager in finance Company (UK Company) in Srilanka தொழில் புரியும் மணமகளுக்கு பெற்றோர் தகுந்த மணமகனை எதிர்பார்க்கின்றனர்.

**077 958 3944**
aonebuilders2001@hotmail.com

(4058)

# உடனடி வேலை வாய்ப்பு

## நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

**V2 TRAVELS**

எமது கிளைகள்

- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-

**0777-068-777**
v2vacancies@gmail.com

(C-2863)

# மணமகள் தேவை

1991, 1995 Dubai இல் வசிக்கும் மணமகன்களுக்கு உள்ளூர்/ வெளியூர் மணமகள் தேவை.
பதிவிலக்கம் 18842,18843

**070 202 2679**

(1081)

# மணமகன் தேவை

1995,london இல் வசிக்கும் UK Citizen பெண்ணுக்கு உள்ளூர், வெளியூர் மணமகன் தேவை.
பதிவிலக்கம் 18452

**070 202 2679**

(1081)

# Kapil Electro Dreams

Electro Dreams




எம்மிடம் LED Light Board வேலைகளை சிறந்த முறையில் உத்தரவாதத்துடன் செய்து பெற்றுக் கொள்ளலாம்.

T.கபில்ராஜ்
**077 172 0799**
Jaffna

(4077)

# அறிவித்தல்

**076 XXX X523**

மேற்படி தொடர்பு இலக்கம் எமது சேவையில் இருந்து நிறுத்தப்பட்டுள்ளது.

சமூக ஆர்வலர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், மற்றும் பொதுமக்கள் மேற்படி தொடர்பிலக்கத்துடன் தொடர்பு கொள்வதைத் தவிர்க்கவும்

**ஈ - சன்ஸ்**

148, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
**021 222 2695 / 077 429 0613**

(C-2858)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால் [illegible] யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.05.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.